Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

Regd. No. 2975.

ஸ்ரீ :

SRI RAMANUJAN

Editor: P. B. ANNANGARACHARYA, KANCHEEPURAM-3.

ஸ்ரீ ராமாநுஜன் - 280.

ஆசிரியர் : P. B. அண்ணங்கராசாரியர்.

வருஷச் சந்தா ரூ. 10. ஜீவியச் சந்தா ரூ. 58.

பேரருளாளன் பெருந்தேவித் தாயார் திருவடிகளே சரணம்.

ஆழ்வார்எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

ஆழ்வார்கள் வாழி அருளிச்செயல் வாழி *
தாழ்வாது மில்குரவர் தாம்வாழி *— ஏழ்பாரு
முய்ய வவர்க ளுரைத்தவைகள் தாம்வாழி *
செய்யமறை தன்னுடனே சேர்ந்து.

1—2—1972 தை மாதம் வெளியிடப்பட்டது.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

சீவரத்து மலையில் சீரியதோர் பேச்சு

தை மாதம் முதல் தேதி மகரஸங்க்ராந்தியன்றிரவு 10 மணிக்குமேல் தேவப் பெருமாள் ஸன்னிதியிலிருந்து புறப்பட்டருளி மறுநாள் காலை பழைய சீவரத்து மலை மேல் மண்டபத்தில் சேர்வர். அன்று மாலை நான்கு மணியிலிருந்து அங்கு மஹோத்ஸவம் கண்டருள்வது மாநில முழுதுமறிந்தது. பதினாயிரக் கணக்கான பக்த ஜனங்கள் திரண்டுவந்து கோலாஹலமாக அனுபவிக்கும் பெரிய திருவிழா இது. சென்னையிலிருந்து பல பல பெரியவர்கள் வந்து கூடுவர். பிரபல சோதிடரென்று பேர்பெற்ற ஸ்ரீ உ. வே. பண்டித காழியூர் ஸ்ரீநிவாஸாசாரியார் இந்த உத்ஸவத்திற்குத் தவருது வருபவர். இவர் இளமையில் நமது பாடசாலையில் பயின்றவராதலால் அங்கு வரும் போதெல்லாம் நம்மைச் சந்தித்துச் சுவைமிக்க இனிய பல மொழிகள் பேசுவர் நேற்று 16—1—72ல் பேசியபேச்சையிங்குத் தெரிவிக்கிறேன்.

ஹரிகதா காலக்ஷேபங்கள் செய்பவர்களில் பின்பாட்டுக்காரர் என்று ஒருவருண்டே. அத்தகைய ஒருவர் ஐம்பது வருடமாக ஒரு பெரியவர்க்குப் பின்பாட்டுக் காரராயிருந்துவருகிருர். இத்தனை வருடகாலம் இவர் கதைகளைவிடாமல் கேட்டுவருகிருரே, இன்று இவரையே கதை சொல்லும்படி நியமிப்போமென்று நினைத்து ஒரு நாள் அவரை நியமித்தாராம். அவரும் சந்தோஷத்துடன் இசைந்து ராமதாஸ் கதை சொல்லுவதாகத் தொடங்கி

ஒரு பாட்டைப் பாடிவிட்டு, இப்பவும்—இப்பவும்—என்னவென்ருல் அதாவது, இப்போது கதை என்னவென்ருல்—இப்பவும்—இப்பவும் என்று திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருந்தாராம். மேலே நுகழ்ச்சியைச் சொல்லுவதற்குள் பெருமாள் மண்டபத்திலிருந்து புறப்பாடு கண்டருளியாயிற்று. இயலுக்குப்போக நேர்ந்து விட்டது. இக் கதையை முடியக் கேட்கப்பெறவில்லையேயென்று குறையுற்ருேம்.

P. B. A.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸ்ரீ:

ஸ்ரீ ராமாநுஜன் 280



சென்னை ஸத்க்ரந்த ப்ரகாசன ஸபையின் சார்பாக மாதந்தோறும் வெளிவருவது

ஆசிரியர்: **P. B. அண்ணங்கராசாரியர்.**

ஸம்புடம் 23	விரோதிஹ்ருத்ஸு தைமீ 1—2—1972	ஸஞ்சிகை 4

"தையில் மகமின்று"

உபதேசரத்தினமாலையில் "நான்மறையோர் கொண்டாடும் நாள்" "நற்றவர்கள் கொண்டாடும் நாள்" "நல்லவர்கள் கொண்டாடும் நாள்" "நாற்றிசையுங் கொண்டாடும் நாள்" என்றிப்படி விலக்ஷணமாகக் கொண்டாடப்படும் நாட்களில் "நற்றவர்கள் கொண்டாடும்நாள் இன்று. *மகம்* என்கிற நக்ஷத்திரத்தை ஆகாயத்தில் காட்டுமவர்கள் ஸப்தர்ஷிகள் சூழவிருக்குமடையாளத்தையிட்டுக் காட்டுவர்கள் ஆகவே திருமழிசையாழ்வாருடையதிருவவதார நக்ஷத்திரமான மகத்தை *நல்தவர்கள்* **கொண்டாடும் நாள்** என்றது மிகப்பொருத்தமானது. சரித்திரவகையில் இவ்வாழ்வார் ப்ருகுமஹர்ஷியின் தொடர்புபெற்றவராதலாலும் நற்றவர்கள் கொண்டாடும் நாள் என்பது ஏற்கும். உபதேசரத்தினமாலைப்பாசுரத்தில் "துயயமதி பெற்ற மழிசைப்பிரான்" என்றது குறிக்கொள்ளத்தக்கது. ஆழ்வார்களெல்லாரும் துய்யமதி பெற்றவர்களாயிருக்கச் செய்தேயும் இவ்வாழ்வார் துய்யமதி பெற்றமை விசேஷமுடைத்தல்லவா? "சாக்கியங்கற்றோம் சமண்கற்றோம் சங்கரனாராக்கிய ஆகம நூலாராய்ந்தோம்" என்றபடி இவ்வாழ்வார் பலமதங்களிலும் புகுந்திருந்து முடிவாகப் பேயாழ்வார் பேரருளால் பரதத்வநிலை தேர்ந்து துய்யமதி பெற்ற ஏற்றமுண்டன்றோ இவர்க்கு.

இவ்வாழ்வார்க்கு ஆசார்யஹ்ருதயத்தில் "உறையிலிடாதவர்" என்று ஸங்கேத நாமம் சாத்தப்பெற்றுள்ளது. பரமத நிரஸனத்திற்காகக் கையில் கொண்ட வாளை உறையிலிடாதவர் என்றபடி. வாளைக் கொண்டு செய்ய நினைத்த காரியம் தலைக்கட்டினாலன்றோ வாளை உறையிலிட்டு உள்ளேவைப்பது. அந்தக்காரியம் இவ்வாழ்வார்க்கு முடிவு பெற்றதாகாமே நிச்சலும் நிகழ்ந்துவருவதாகக் கூறினபடி. ஸ்ரீமந்நாராயண பரத்துவத்தை ஓயாதே ஸ்தாபிப்பதில் ஊக்கமுடையவர் இவ்வாழ்வாரொருவரே என்பது கருத்து. இவ்வாழ்வாருடைய முதற் பிரபப்தமான நான் முகன் திருவந்தாதியில்.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

"கல்லாதவரிலங்கை கட்டழித்த காகுத்த
னல்லா லொரு தெய்வம்யானிலேன்—பொல்லாத
தேவரைத் தேவரல்லாரைத் திருவில்லாத்
தேவரைத் தேறேன்மின்தேவு."

என்கிறவொரு பாசுரமே நிச்சலுமநுஸந்திக்கத்தகும். மற்றுமுள்ள ஆழ்வார்களும் நாராயணபாரம்ய ஸ்தாபனத்தில் ச்ரத்தை கொண்டவர்களேயாயினும் அதில் இவருடைய ச்ரத்தை அப்ரமேயம் என்பது தோன்ற "உறையிலிடாதவர்" என்று விலக்ஷணமான திருநாமத்தை ஆசார்யஹ்ருதயகாரர் வழங்கினர்.

பெரிய திருமொழியில் அஞ்சாம்பத்தில் பத்தாந்திருமொழி நந்திபுரவிண்ணகரப் பதிகம். அதில் நிகமனப்பாசுரத்தில் ஆழ்வார் தமக்கு இட்டுக்கொண்ட விசேஷணத்தையும் எம்பெருமானுக்கு இட்ட விசேஷணத்தையும் நோக்கின பெரியவாச்சான் பிள்ளை இன்சுவைப் பொருளொன்று அருளிச் செய்கிறார் காண்மின். ஆழ்வார் தமக்கு இட்டுக்கொண்ட விசேஷணம் "கறைவளரும் வேல்வல்ல (கலியன்)" என்பது. எம்பெருமானுக்கு இட்ட விசேஷணமோ வென்னில்; "உறைகொள் புகராழி சுரிசங்கமவையங்கையுடையான்" என்பது. எம்பெருமான் தன்னுடைய திவ்யாயுதங்களை உறையிலிட்டு வைத்திருப்பதாகச் சொல்லிற்று. ஆழ்வார் தம்மைக் "கறைவளரும் வேல்வல்ல கலியன்" என்கையாலே தம்முடைய வேற்படைக்குக் கறை கழுவ அவகாசமின்மையால் அது வளர்ந்துகொண்டே செல்வதாகத் தெரிவிக்கப்பட்டதாயிற்று.

இங்குப் பெரியவாச்சான் பிள்ளை ஸ்ரீஸூக்தி: —

"விரோதிநிரஸநத்துக்குத் திருமங்கையாழ்வார் கையில் வேல் உண்டான பின்பு திருவாழி உறையிட்டிருக்குங்காண்." என்பதாம்.

ஸ்ரீஸுதர்சந சதகத்தில் திருவாழியாழ்வானுடைய சத்ரு நிரஸனப்பெருமைகளை அவருடைய அவயவங்களான ஜ்வாலை, அக்ஷம், நேமி, அரம் நாபி என்னுமவற்றில் ஏறிட்டுச் சொல்லியிருப்பதுபோல, திருமங்கையாழ்வாருடைய ஸ்ரீஸூக்திமூலகமான விரோதி நிரஸநப் பெருமையை அவருடைய வேற்படையில் ஏறிட்டுச் சொன்னதாகக் கொள்க. ப்ரக்ருதம் திருமழிசைப்பிரானை உறையிலிடாதவர் என்றதும் தமக்கொரு கத்தியுண்டாய் அதை உறையிலிடாதவர் என்றபடியன்று. ஸ்ரீமந்நாராயண பரத்வத்தையும் தேவதாந்தரங்களின் அவரத்வத்தையும் அடுத்தடுத்து அருளிச் செய்பவரென்றவாறு.

இவ்வாழ்வாருக்கு சயனத் திருக்கோலமான எம்பெருமான்களிடத்திலேயே மிக்க ஈடுபாடு. தமது திருவந்தாதியில் சயனத் திருக்கோலமுள்ள திருப்பதிகளைச் சேர்த்து ஒருபாசுரம் பாடியுள்ளார்; அதாவது.

"நாகத் தணைக் குடந்தை வெஃகாத் திருவெவ்வுள்
நாகத் தணையரங்கம் பேர் அன்பில்—நாகத்
தணைப்பாற் கடல்கிடக்கு மாதி நெடுமால்
அணைப்பார் கருத்தனு வான்" —என்பது.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

திருவெஃகாவிலும் திருக்குடந்தையிலும் இவ்வாழ்வாருடைய வைபவம் வீறு பெற்றமை ப்ரஸித்தம். *திருவெஃகா* என்பது காஞ்சீபுரம் ஸ்ரீ யதோக்தகாரி யெம்பெருமான் ஸன்னிதி. அங்கு இவ்வாழ்வார் கணிகண்ணனென்கிற சிஷ்யனோடு எழுந்தருளியிருக்குங் காலத்தில் அவ்வூரரசனுடைய கொடுங்கோன்மையினால் கணிகண்ணன் ஊரைவிட்டு வெளியேற நேர்ந்தபோது அவனைவிட்டுப் பிரிந்திருக்கமாட்டாத ஆழ்வார் எம்பெருமானெதிரே சென்று "கணிகண்ணன் போகின்றான் காமருபூங் கச்சி மணிவண்ணா நீ கிடக்கவேண்டா, துணிவுடைய மெய்ந்நாப் புலவனும் போகின்றேன் நீயுமுன்றன் பைந்நாகப்பாய் சுருட்டிக்கொள்" என்று விண்ணப்பஞ் செய்ய, அப்படியே பைந்நாகப் பாயைச் சுருட்டிக் கொண்டு ஆழ்வாரைப் பின் சென்றதாகவும், அப்போது கச்சி நகர் முழுவதும் இருள்மூடிப்போக அரசன் விஷயமறிந்து தான் பட்ட அபசாரத்திற்கு நொந்து பரிவாரங்களுடன் ஓடிச்சென்று பாலாற்றங்கரையிலே எம்பெருமானோடு கூடவிருக்கும் ஆழ்வாரைக் கண்டு க்ஷமை வேண்டிக்கொள்ள ஆழ்வாரும் திருவுள்ளமிரங்கி எம்பெருமானைநோக்கி "கணிகண்ணன் போக்கொழிந்தான் காமருபூங்கச்சி, மணிவண்ணா! நீ கிடக்கவேண்டும்—துணிவுடைய மெய்ந்நாப் புலவனும் மீள்கின்றான், நீயுமுன்றன் பைந்நாகப் பாய்விரித்துக்கொள்" என்று வேண்ட, அப்படியே மீண்டெழுந்தருளி முன்போல் சயனித்தருளினதாக இதிஹாஸம். இவ்வைதிஹ்யம் ஸ்ரீ யதோக்தகாரி யெம்பெருமான் ஸன்னிதியில் ***தையில் மகத்தன்று*** உத்ஸவரூபமாகவும் நெடுநாளாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

இக்காலத்தவர்கள் எதிலும் ஆக்ஷேபம் நிகழ்த்துமவர்களாதலால் "அசல மூர்த்தியான எம்பெருமான் அரவணையைச் சுருட்டிக்கொண்டு ஆழ்வாரைப் பின் சென்றார் என்பது கட்டுக் கதை" என்கிறார்கள். இங்ஙனே பலவிஷயங்களில் பேதையர்களின் பேச்சுக்கள் உள்ளன. பிரகிருதம் இவ்விஷயத்தில்மட்டும் ஆஸ்திகர்களுக்குத் தெரிவிக்கிறேன். கீழே விவரித்த ஐதிஹ்யம் சில தமிழ் நூற்களில் மட்டும் காணப்பட்டால் இதில் அவநம்பிக்கையுண்டாகலாம். வேதாந்த தேசிகருடைய ஜீவித காலம் எப்போதென்பதை உலகமறியும். அவ்வாசிரியர் ஸ்ரீ யதோக்தகாரி யெம்பெருமானைப்பற்றி இயற்றியுள்ள வடமொழித் தோத்திரத்தில் இவ்வைதிஹ்யத்தை எடுத்துக்காட்டியுள்ளவிதம் மிக அற்புதமானது; அதனைக் கேண்மின்.

(அதில் ஆறாவது சுலோகத்தில்)

"*ப்ரத்யாதிசந்தி பவஸஞ்சரணம் ப்ரஜாநாம் பக்தாநுகந்துரிஹ* யஸ்ய *கதாகதாநி*" என்றது ஆச்சரியமான பணிப்பு. இதன் பொருளென்னவென்றால், ஒருபக்தன் சொற்படி அவன்பின்னே போவதும் திரும்பிவருவதுமான செயலையநுஸந்தித்தால், நரகத்திற்குப்போவதும் கருக்குழிக்குத் திரும்புவதுமாகச் செல்லுகிற நம்முடைய கதாகதங்கள் தொலையுமென்கை. மாறிமாறிப்பல பிறப்பும் பிறப்பதாகிற நம்முடைய ஸம்ஸரணம் தொலையுமென்றவாறு. மேலே எட்டாவது சுலோகத்தில் "*சரணமுபகதாநாம் ஸோயமாதேச காரீ*" என்றிருப்பதும் இவ்வைதிஹ்யத்தையே உட்கொண்டதாயினும் அதற்கு ஏதேனும் அந்யதாஸித்தி சொல்லிவிடக் கூடும்

இவ்வாழ்வார்தாமே திருக்குடந்தை ஆராவமுதன் ஸன்னிதியிலும் சிலகாலம் வாழ்ந்திருந்தபோது அப்பெருமானுடைய பக்த பராதீநத்வத்தையும் வெளிப்படுத்தினார்; எங்ஙனே யென்னில்; (திருச்சந்த விருத்தத்தில்)

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.
http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

"நடந்தகால்கள் நொந்தவோ நடுங்க ஞாலமேனமாய்
இடந்த மெய்குலுங்கவோ இலங்குமால் வரைச்சுரம்
கடந்த கால் பரந்த காவிரிக்கரைக் குடந்தையுள்
கிடந்தவாறு?" என்று ஸாதித்து விட்டு. "எழுந்திருந்து பேசு" என்றார்.

உடனே ஆராவமுதன் அரவணையிலிருந்து எழுந்திருக்கத் தொடங்கினான்; உடனே "அடியேனுக்காக அர்ச்சாவதாரஸமாதியைக் குலைத்துக்கொள்ள விரும்பியது போதும்" என்று. "வாழிகேசனே" என்றார். கேசவா! இங்ஙனமே வாழ்ந்திடுக வென்கை. இற்றைக்கும் ஆராவமுதன் உத்தாநசாயியாக ஸேவைதந்தருளுமழகை பக்தர்கள் அநுபவிக்கவேணும்.

திருமழிசைப்பிரானுக்கு அடுத்தவரான நம்மாழ்வார் திருவாய்மொழியில் "ஆராவமுதே அடியேனுடலம்" என்கிற திருக்குடந்தைப் பதிகத்தில் ஒன்பதாம் பாட்டில் "அசைவில் உலகம் பரவக் கிடந்தாய்!" என்பதனால் இதனை விளங்கவைத் தருளி யிருக்கிறாரென்பதை நுண்மதியோருணர்வர், அசைவில்—திருமழிசைப் பிரானுக்காக அசைந்து கொடுத்ததில் என்றபடி. அப்பாசுரத்தில் மூன்றாமடியில் "செழுமாமணிகள் சேருந்திருக்குடந்தை" என்றவிடத்து ஈடு முப்பத்தாறாயிரப்படியில் திருமழிசைப் பிரானையெடுத்துக் காட்டியிருப்பதும் நோக்கத்தக்கது. ... ... *

சென்னையில் திருப்பாவை ஸதஸ்ஸுகள்

நேற்று மார்கழி மாதத்தில் சென்னையில் பல பேட்டைகளிலும் நடைபெற்ற திருப்பாவை ப்ரவசனங்கள் மொத்தம் அறுபத்திரண்டென்று சிலர் கணக்கெடுத்துத் தெரிவித்தார்கள். ஸமாசார பத்திரிகைகளில் Engagements என்ற மகுடத்தின்கீழ் வெளிவந்தவற்றை மட்டுங்கொண்டு தெரிவித்த கணக்கு இதுவென்றும், பத்ரிகைகளில் வெளிவராத ப்ரவசனங்கள் இன்னமும் அதிகமாகவே யுண்டென்றும் சிலர் தெரிவித்தனர். சிலர் மூலமான பாசுரத்தையே எழுதிவைத்துக்கொண்டு வாசித்துப் பொருளுரைத்தனர் என்றும் சொன்னார் சிலர் "பட்டர் பிரான் கோதை சொன்ன சங்கத் தமிழ்மாலை" என்றாள் ஆண்டாள் சங்கம் சங்கமாக—திரள் திரளாக இருந்து அநுபவிக்கக்கூடிய தமிழ்மாலை திருப்பாவை-என்றபடி. திருப்பாவையை எவ்விடத்தில் யார் பிரவசனம் செய்தாலும் ச்ரோதாக்களின் சங்கம் [திரள்] மலிந்தே யிருக்குமென்னத் தட்டில்லை நம்மாழ்வார் (2—3—1) "குழாங்களாய் அடியீர்! உடன் கூடி நின்றாடுமினே" என்று திருவாய்மொழியைக் குழாங்கூடி யநுபவிக்க வேணுமென்று பாரித்தார். கம்பர் சடகோபரந்தாதியில் "கூட்டங்கள்தோறுங் குருகைப் பிரான் குணங்கூறுமன்பரீட்டங்கள்தோறு மிருக்கப்பெற்றேம்" என்றார். எனினும் திருவாய்மொழி ப்ரவசனத்திற்கு இவ்வளவு கூட்டங்கூடுவது அரிதுதான். ஆண்டாளுடைய திருவாக்குக்கு அமைந்த அதிசயம் அஸாதாரணமே

ப்ரவசனங்கள் தவிர "திருப்பாவை ஸதஸ்"ஸென்று சிலவிடங்களில் சில பெரியார்கள் ஆங்காங்கு ஞாயிற்றுக் கிழமைகளில் நடத்தினார்கள். ஆங்காங்கு திருப்பாவை ப்ரவசனம் செய்கிற வித்வான்களில் ஐந்தாறு நபர்களையோ ஏழெட்டு நபர்களையோ வரவழைத்து மூன்று பாசுரங்களின் ஸாரத்தைப் பத்து நிமிஷத்தில் சொல்லவேணுமென்றும், ஐந்து பாசுரங்களின் ஸாரத்தைப் பதினைந்து நிமிஷங்களில் பேசவேணுமென்றும் நியமித்து, அவரவர்கள் பீடிகை தொடங்கும்போதே

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

கடிகாரத்தைக் காட்டுவதும், அவர்களும் இதோ ஆய்விட்டது என்பதும் ஒரு விநோதக் காட்சியாக இருந்தது. இதைப்பற்றி ஒரு ஸதஸ்ஸில் அடியேன் உபந்யஸித்ததை இங்கு விஜ்ஞாபிக்கிறேன்; திருமங்கையாழ்வார் பெரிய திருமொழியில் (10—10—6)

"கோழிகூவென்னுமால் தோழிநானென் செய்கேன்!
ஆழிவண்ணர் வரும் பொழுதாயிற்று, கோழிகூ வென்னுமால்."

என்றொரு பாசுரம் பணித்துள்ளார். இப்பாட்டின் அந்வய க்ரமம் கேளீர்; கோழிகூ வென்னுமால் ஆழிவண்ணர் வரும் பொழுதாயிற்று; கோழிகூவென்னுமால் தோழி நானென் செய்கேன்! என்றிங்ஙனே அந்வயித்துக் கொள்ளவேணும். கோழிகளில் சாமக்கோழி யென்றுண்டு. அது யாமந்தோறும் கூவும். கண்ணபிரான் பரகால-நாயகியோடு ஸம்ச்லேஷிக்க வருவதைப்பற்றிக் கூறும்போது "சாமக்கோழி கூவும்-போது வருவேன்; மறுபடியும் அது கூவும்போது விட்டுப் பிரிவேன்" என்று ஒரு ஸங்கேதமிட்டுக் கூறியிருந்தனன். கோழிகூவுங் காலம் அணுகிவிட்டது; அப்போது பரகாலநாயகி தோழியோடு ஆனந்தமாகச் சொல்லுகிறாள். கோழிகூ வென்னும்; கடல் வண்ணனான கண்ணன் வரும் பொழுதாயிற்று என்றாள். விச்லேஷகாலம் நெடுகிச் செல்வதும் ஸம்ச்லேஷகாலம் ஒரு நொடியாய்ச்செல்வதும் இயல்பாதலால் அதை நினைத்த பரகாலநாயகி ஸம்ச்லேஷகாலம் முடிந்துவிட்டதாகவே நினைத்து "கோழிகூ வென்னுமால் தோழி நானென் செய்கேன்!" என்றாள்.

இதுபோல திருப்பாவை ஸதஸ்ஸுக்களில் உபந்யாஸகர்களுக்குக் கொடுக்கிற அவகாசம் ஆரம்பமும் அவஸானமுமே தெரியும்படியாய் இருக்கு மென்னலாம். இந்த நிர்ப்பந்தத்தில் அடியேன் அகப்பட்டுக்கொள்வதில்லை. ஸதஸ்ஸில் நிர்ப்-பந்தமாக அந்வயிக்க நேர்ந்தால் பலபல ஸாரார்த்தங்களைக் கொண்ட திருப்பாவையில் ஏதேனுமொரு ஸாரார்த்தத்தை எடுத்துரைத்து நின்றிடுவேன். ஒரு ஸதஸ்ஸில் கூறின ஸாரார்த்தம் கேளீர்.

"அந்நவாந் அந்நாதோ பவதி"

தைத்திரீயோபநிஷத்தில் ஓதப்பட்டுவரும் வாக்கியமொன்று இது. *அந்நவாந்* என்பதற்கு அன்னமுடையவன் என்று பொருள். *அந்நாத:* என்பதற்கு அன்ன முண்பவன் என்று பொருள். (அந்நவாந் பவதி) என்றால் போதும், அல்லது (அந்நாதோ பவதி) என்றால் போதும். அன்னம் படைத்தவன் அன்னமுண்ணுமல் போவானா? அன்னம் படைப்பது எதற்காக? உண்பதற்காகத்தானே. அப்படி யிருக்க (அந்நவாந் பவதி) என்றும் (அந்நாதோ பவதி) என்றும் ஓதுவானேன்? இங்ஙனே ஓதினது மட்டுமன்று! தைத்திரீய ஸம்ஹிதையில் இரண்டாவது காண்டம் இரண்டாம் ப்ரச்நத்தில் (*அந்நவாந் ஸ்யாம்*) என்பவனுக்கு ஒரு யாகமும் (*அந்நாதஸ் ஸ்யாம்*) என்பவனுக்கு ஒரு யாகமும் அநுஷ்டேயமாகச் சொல்லிற்று. அதிலேயே மூன்றாவது காண்டம் நான்காவது ப்ரச்னத்தில் (*அந்நவாந் ஸ்யாம், அந்நாதச்ச ஸ்யாம்*) என்பவனுக்கு ஒரு யாகம் அநுஷ்டேயமாகச் சொல்லிற்று. இங்ஙனே ஓதினதன் கருத்தை நாமுணரவேணும். உணர முயலவேணும்.

"போஜ்யம் போஜநபாக்யஞ்ச நால்பஸ்ய தபஸ: ப்பலம்" என்றான் ஒரு மஹாகவி. (போஜ்யம் போஜநசக்திச் ச) என்னும் பாடமுண்டு. அன்னம் படைத்

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

தவனெல்லாம் அன்னமுண்ணப் பெறுகிருனென்பது கிடையாது. மஹாதனிகர்களாயிருந்தும் க்ருபணதையால் சிலரும் ரோகாதிகளால் சிலரும் புஜிக்கப்பெருமே யிருப்பதைக் காணுநின்ருேம்.

தைத்திரீயோபநிஷத்தில் ஸைஷாநந்தஸ்ய மீமாம்ஸா பவதி என்று தொடங்கி ஸ ஏகோ மாநுஷ ஆனந்த: என்றதனிடையில் ஆசிஷ்ட: என்று அசந சீலத்வமும் ஒரு பேருகப் பேசப்பட்டது. "நன்ருக உண்பவனுயிருக்கை ஒரு ஆனந்தம்" என்னப்பட்டது. அங்கு பாஷ்யத்தில் "ஏதேந ரோகாதிராஹித்யம் உக்தம் பவதி" என்னப்பட்டது. ஆதிசப்தத்தாலே கார்ப்பண்யம் கொள்ளக்கடவது.

இனி திருப்பாவைக்கு வருவோம். திருப்பாவையில் எத்தனை பாத்ரப்ரவேசங்களாயிருக்கின்றன வென்று பார்த்தால், கண்ணனையும், கோபிகளைப்பற்றியும் சொல்லவேணுமோ? நந்தகோபாலன், யசோதை, ஆழிமழைக்கண்ணன், கோயில் காப்பான், தோரண வாசல் காப்பான், நம்பி மூத்தபிரான் (பலராமன்), நப்பின்னைப் பிராட்டி ஆக இத்தனை பேர்கள் திருப்பாவையில் புகுந்திருக்கிருர்கள் இவர்களில் அதிகமான பிரவேசம் யாருக்கென்று பார்த்தால் நந்தகோபனொருவனுக்கேயாம். முதற்பாட்டில் கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் பதினுரும் பாட்டில் நாயகனுய் நின்ற நந்தகோபன் பதினேழாம் பாட்டில் எம்பெருமான் நந்தகோபாலா பதினெட்டாம் பாட்டில் ஓடாத தோள் வலியன் நந்தகோபாலன் இருபத்தோராம் பாட்டில் வள்ளல் பெரும் பசுக்கள் ஆற்றப்படைத்தான் —ஆக ஐந்திடங்களில் நந்தகோபனுடைய ப்ரசம்ஸை நிகழ்ந்துள்ளது. திருப்பாவையில் இப்படிவேருெரு வ்யக்திக்கு ப்ரசுரமான ப்ரசம்ஸையில்லை யென்பது ஸ்பஷ்டம். ஸாக்ஷாத்கண்ணபிரானைப் பெற்ற பாக்கியசாலியான வஸுதேவரைப்பற்றித் திருப்பாவையில் ஓரிடத்திலாவது ப்ரஸ்தாவமுண்டோ வென்னில்; இல்லை ஒருத்தி மகனுய்ப் பிறந்து என்ற பாட்டில் தேவகிப் பிராட்டி கோப்யமாகத் தலை காட்டுகிருள்; அந்த ரீதியுமில்லை வஸுதேவர்க்கு.

(அந்நவாந் அந்நாதோ பவதி) என்கிற ச்ருதியை இப்போது எடுத்துக்கொள்வோம். வஸுதேவர் அந்நவாந் பவதிக்கு இலக்கு. நந்தகோபர் அந்நாதோ பவதிக்கு இலக்கு. வஸுதேவனென்பதற்குப் பணத்தினுல் விளங்குபவன் என்பது பொருள். நந்தகோபனென்பதற்கு ஆனந்தப் படுபவனென்று பொருள். பணம் ஓரிடத்திலும் ஆனந்தம் மற்ருேரிடத்திலுமாயிற்று. "வஸுதேவோ வஹந் க்ருஷ்ணம் ஜாநுமாத்ரோதகோ யயௌ" என்று ஸ்ரீ விஷ்ணு புராணத்திற் கூறினபடி அருந்தெய்வத்தைப்பெற்ற தகப்பனே "நந்தன் பெற்றனன் நல்வினையில்லா நங்கள் கோன் வசுதேவன் பெற்றிலனே" என்று தெய்வத் தேவகி புலம்பும்படியாகச் சீர்மல்கு மாய்ப்பாடியிலே கொண்டுவிடவேண்டியதாயிற்று. அந்நாதோ பவதிக்கு ஈஷத்தும் இலக்காகவில்லை. இந்த மருமத்தையும் ஒரு வேத வாக்யமே உணர்த்துகின்றது; (அதாவது)

"நாயமாத்மா ப்ரவசநேந லப்யோ ந மேதயா ந பஹுநா ச்ருதேந;
யமேவைஷ வ்ருணுதே தேந லப்ய: தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூம் ஸ்வாம்"

என்பதாம். (ஏஷ ஏவ யம் வ்ருணுதே தேந லப்ய:) பரமபுருஷன் தானே எவனை

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸ்வீகரிக்கிருனே, அவன்தான் பரமாத்மாவைப் பெறுபவனுவன். பெறுவதென்றுல் என்னவென்னில்; (ஏஷ ஆத்மா தஸ்ய ஸ்வாம் தநூம் விவ்ருணுதே) இந்த பரமாத்மா, தன்னுல் ஸ்வீகரிக்கப்பட்ட அந்த அதிகாரிக்குத் தனது திருமேனியை முற்றூட்டாக அநுபவிக்கக் கொடுக்கிருனென்கை. இழக்கைக்கு ஒரு தம்பதிகளும், எல்லாம் பெறுகைக்கு ஒரு தம்பதிகளுமாயிற்றந்தோ! ... ...

வினவினவர்களுக்கு விடுத்த விடை

மார்கழியில் நமது அன்பர்கள் நம்மைச் சிலருடைய திருப்பாவை காலக்ஷேபங்களுக்கு அழைத்துச் சென்றுர்கள். "இவர் இந்த வருஷந்தான் திருப்பாவை சொல்லத் தொடங்கியிருக்கிருர்; எப்படியிருக்கிறதென்பதை உள்ளபடியுரைக்கவேணும்; நன்ருக இருக்கிறதா?" என்று வினவினவர்களுக்கு ஓரிடத்தில் ஸபையிலேயே நாம் விடுத்த விடையை இங்குத் தெரிவிக்கிருேம்; பேயாழ்வார் தமது திருவந்தாதியில் அருளிச் செய்கிருர் [பா–21]

"பேசுவார் எவ்வளவு பேசுவர். அவ்வளவே
வாசமலர்த்துழாய் மாலையான் – தேசுடைய
சக்கரத்தான் சங்கினன் சார்ங்கத்தான், பொங்கரவ
வக்கரனைக் கொன்ருன் வடிவு."

(எம்பெருமானுடைய ஸ்வரூப ஸ்வபாவங்கள் எப்படிப்பட்டவையென்றுல் [பேசுவார் எவ்வளவு பேசுவர் அவ்வளவே] பேசுகிறவர்கள் எவ்வெவ்வளவு பேசுகிருர்களோ அவ்வவ்வளவில் அடங்கி நிற்குமது). இதைச் சிறிது விவரிப்போம். எம்பெருமானைப் பற்றிப் பேசுகிறவர்கள் கலைகளெல்லாம் அறக் கற்றவர்களாயிருக்கவேணுமென்கிற நிர்ப்பந்தமில்லை. இராமாநுச நூற்றந்தாதியில் "பெரியவர் பேசினும் பேதையர் பேசினும் தங்குணங்கட்கு உரியசொல் என்றுமுடையவன் இராமாநுசன்" என்கிருர் அமுதனுர். எம்பெருமானுருடைய திருக்குணங்களை ஆழ்வான் ஆண்டான் எம்பார் போல்வாரே பேசவேணுமென்பதில்லை; அற்பஞானிகள் பேசத் தொடங்கினுலும் 'மிக அழகிதாகச் சொன்னுர், இவ்வளவு யாராலும் சொல்லமுடியாது' என்று புகழும்படியாகவேயிருக்குமாம். அதேபோல, எம்பெருமானது திருக்குணங்களையும் இன்னுரினையாரென்கிற வாசியற யார் பேசினுலும் "சொல்லவேண்டிய பெருமைகளையெல்லாம் அழகாகச் சொல்லிவிட்டாரே; இன்னும் சொல்லவேண்டியது ஒன்றும் சேஷித்திருக்கவில்லையே" என்றுதான் சொல்லும்படியாயிருக்கும்—என்பது பேயாழ்வார் அருளிச் செயலின் கருத்து.

இதை அடியொற்றியே ஆளவந்தார் தமது ஸ்தோத்ரரத்னத்தில் "யத் வா ச்ரமாவதி" என்கிற சுலோகத்தில் "ஏவமேவ கலு தேபி ஸதா ஸ்துவந்த: வேதாச் சதுர்முகமுகாச் ச, மஹார்ணவாந்த: கோ மஜ்ஜதோ: அணுகுலாசலயோர் விசேஷ:" என்றருளிச்செய்தார். ஆயிரவாய் படைத்த அனந்தன் பேசினுலும் எல்லைகாண முடியாத எம்பெருமானது பெருமைகளைப் பேசுமவர்கள் பெரியவராகிலென்? சிறியவராகிலென்ன? "தங்களன்பார தமது சொல்வலத்தால் தலைத்தலைச் சிறந்து பூசிப்ப" என்று நம்மாழ்வார் ஸாதிக்கிறபடி நெஞ்சு கனிந்து யார்பேசினுலும் நன்றேயாகும்.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

"*யதி புநரபிதேயமத்விதீயம்*" என்று வரவரமுநிசதகத்தில் எறும்பியப்பா ஸாதிக்கிற படி பேசுவதற்குக் கொள்ளும் விஷயம் நன்ருயிருந்துவிட்டால் வக்தாக்களைப்பற்றியும் வாக்குக்களைப்பற்றியும் விமர்சிக்கவேண்டிய ஆவச்யகதையில்லை என்று சொல்லி முடித்தேன்.

ஒரு ஸுபாஷிதம்

அரசாணிபாலை வேங்கடாத்வரி பணித்த நூல்களில் *ஸுபாஷித கௌஸ்துப* மென்பதொன்று; அதில் ஒரு ஸுபாஷிதம்:—

"வாசாடோக்தெள வாகம்ருதே வா ஸுகவீநாம்
ஸ்தோகப்ராஜ்ஞாஸ் துல்யத்ருசோ ஹந்தபவந்தி,
கோமாயூநாம் கோகிலயூநாமபி சப்தேஷு
ஏகாகாரா மாநஸவ்ருத்திர் மஹிஷாணும்."

உபந்யாஸகர்களுக்கு இந்த ச்லோகம் கண்டபாடமாயிருக்கத்தக்கது. இதன் பொருளென்னவென்ருல், அரட்டை பேசுமவர்கள் என்று சிலருண்டு; அமுதமொழி பொழியுமவர்களென்று சிலருண்டு; இவ்விரு வகுப்பினருடைய பேச்சையும் துல்யமாகவே பாவிப்பர் சிலர். காட்டில் ஒருபுறத்தில் குள்ளநரிகள் ஊளையிடுவதிலும் மற்ருெருபுறத்தில் கர்ணும்ருதமாகக் குயில் கூவுவதிலும் எருமைக் கடாக்களுக்கு ஒரு வாசியுணர்ச்சி இல்லையன்ருே—என்பதாம்.

ஒருவர் பேசுகிருர்—புகைவண்டியில் பயணம் செய்பவர்களில் சிலர் முதல் வகுப்பு டிக்கெட் வாங்குகிருர்கள்; சிலர் இரண்டாம் வகுப்பு டிக்கெட் வாங்குகிருர்கள், சிலர் மூன்ரும் வகுப்பு டிக்கெட் வாங்குகிருர்கள். மூன்ரும் வகுப்பு டிக்கெட் வாங்குமவர்கள் அந்த ஒருவகுப்பு வண்டியில் மட்டும் ஏறலாமேமொழிய முதல் வகுப்பு வண்டியிலோ இரண்டாம் வகுப்பு வண்டியிலோ ஏறமுடியாது. இரண்டாம் வகுப்பு டிக்கெட்வாங்கினுல் அதிலும் ஏறலாம், மூன்ரும் வகுப்பிலும் ஏறலாம். ஆனுல் முதல் வகுப்பில் ஏறமுடியாது. முதல் வகுப்பு டிக்கெட் வாங்கி விட்டால் எந்த வகுப்பிலும் ஏறலாம், ஆனுல் ஏர்கண்டிஷனில் ஏறமுடியாது. ஏர்கண்டிஷன் டிக்கெட் வாங்கி விட்டாலும் அந்த வகுப்பிலும் ஏறலாம், முதல் வகுப்பிலும் ஏறலாம், இரண்டாம் வகுப்பிலும் ஏறலாம், மூன்ரும் வகுப்பிலும் ஏறலாம். தவிர ஒரு வேடிக்கை பாருங்கள். புகைவண்டி தண்டுவாளத்தின்மேல்தான் போகும். கப்பல்கடலில்தான் செல்லும். ஏரோப்ளான் ஆகாயத்தில்தான்பறக்கும். வண்டிகளும் ஸைகில்களும் மோடார்களும் தரையில் தான் செல்லும்.........இப்படி பலவும் பேசிக்கொண்டுபோகிருர். கேட்பவர்கள் "என்ன அருமையான சொற்பொழிவு! ரங்காசாரியரும் ராகவாசாரியரும் பேசுகிருர்களே, அவர்களால் இப்படிப் பேசமுடியுமா? என்கிருர்கள்". லோகோ பிந்நருசி:."

பத்திராதிபருடைய முக்கியமான குறிப்பு:—எனது கண்பார்வைக் குறைவுக்கு இன்னும் பரிஹாரம் ஏற்படவில்லை. நண்பர்கள் எழுதும் கடிதங்கள் நானே நேரில் வாசிக்க வேணுமானுல் விட்டுவிட்டுப் பெரிய எழுத்தில் எழுதவேண்டும். —ஆசிரியர்.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

கண்ணனும் அண்ணனும் பேசியவை

(முன்னிதழ்த் தொடர்ச்சி)

கண்ணா—கோவிந்தன் குணம்பாடி ஆவி காத்திருக்கு மென்னண்ணா! முப்பதும் தப்பாமே உரைத்து முடித்து வந்தாயா? அநுபவித்த விசேஷங்களையெல்லாம் எனக்குச் சொல்லுவையா?

அண்ணா:—கன்று மேய்த்து விளையாடுங் கோவலக்கண்ணா! முன்பு நீ சொன்னதை மறந்து விட்டல்லவா இப்படி கேள்வி கேட்கிறாய். எம்பெருமானாரைப்பற்றி அமுதனார் பேசின "உணர்ந்த மெய்ஞ்ஞானியர் யோகந்தொறும், திருவாய்மொழியின் மணந்தரு மின்னிசை மன்னுமிடந்தொறும் மாமலராள் புணர்ந்த பொன்மார்பன் பொருந்தும் பதி தொறும்புக்கு நிற்குமிராமானுசன்" என்ற பாசுரத்தையெடுத்துரைத்து அந்த ஸ்ரீராமாநுஜரைப் போலே நானும் காலக்ஷேப கூடங்களிலும் என் கதைகள் பேசப்படுமிடங்களிலும் மன்னியிருப்பேனென்று சொல்லியிருந்தாயல்லவா? அதன்படி நீ பூர்த்தியாகக் கேட்டாயல்லவா? கேட்டதையெல்லாம் சொல்லு என்று நான் கோரவில்லை; கேட்டவற்றில் சிற்சில விஷயங்களை—நீ ரஸித்தவற்றைச்சொல்லு கேட்போம்.

கண்ணா—என்னுடை யாருயிரான அண்ணா! நான் உன்னுடைய கோஷ்டியில் மட்டுமிருந்திலேன்; நிலவுலகில் எத்தனையூர்களில் எத்தனையிடங்களில் திருப்பாவைச் சொற்பொழிவுகள் நடந்தனவோ அத்தனையிடங்களிலும் இருந்து கேட்டவனே; அவற்றையெல்லாம் சொல்லச் சொன்னாலும் சொல்லுவேன். இப்போது நீ கேட்டவரைக்கும் உன் கோஷ்டியில் கேட்டவற்றில் சிற் சிலவே சொல்லுகிறேன்.

அண்ணா—அந்தமொன்றில்லாத ஆயப்பிள்ளாய்! ¤எல்லே யிளங்கிளியேயென்கிற பாசுரத்தன்றுதான் என்னிடம் நீ வந்து பேசினது; அதற்கு முன்னேயும் தொடக்கமே பிடித்து நீ கேட்டதாகச் சொல்லுவதால் அவதாரிகையிலிருந்தே சொல்லவேணுமென்று கோருகிறேன்.

கண்ணா—நெஞ்சுருகிக்கண்பனிப்ப நிற்கு மண்ணா! நீ சொற்பொழிவாற்றும் போது கோஷ்டியில் சிலர் குறிப்பெழுதிக் கொள்வதைக் கண்டேன். என்னைப்பற்றி நானே சொல்லிக் கொள்ளுகிறேன். ஒவ்வொன்றையும் என்னுடைய செஞ்சகம்பால் சுவர் வழி எழுதிக்கொண்டேன். அவதாரிகையில் நீ என்னைப்பற்றி ஏற்றமாகச் சொன்னதையும் சொல்லுகிறேன், தாழ்வாகச் சொன்னதையும் சொல்லுகிறேன்.

அண்ணா—கணக்கில் கீர்த்தி வெள்ளக் கதிர் ஞான மூர்த்தீ கண்ணா! உன்னைப்பற்றித் தாழ்வாக ஒரு போதும் ஒன்றும் சொல்லமாட்டேனே; வேறு யாரோ சொன்னதை நான் சொன்னதாக மயங்கிச் சொல்ல நினைக்கிறாய் போலும். உன்னைப்பற்றித் தாழ்வாகச் சொல்ல என்ன இருக்கிறது?

கண்ணா—மதியெல்லா முள் கலங்கி மயங்கிப்பேசு மண்ணா! மயக்கம் உனக்கே யொழிய எனக்கில்லை; கேட்டது கேட்டபடியே சொல்லுகிறேன். நீ தாழ்வு சொன்னதும் எனக்குப் பரமபோக்யமேயாகும். ஏற்றமாகச் சொன்னாயே, அதை முன்னம் சொல்லுகிறேன்.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

"ஆண்டாள் திருப்பாவைக்குக் கண்ணனை இலக்காகக் கொள்ளாமல் இராமனை இலக்காகக் கொண்டிருந்தால் ஒரு சுவையுமில்லாமல் ரஸபங்கமாகவே யிருந்திருக்கும்'' என்றுயல்லவா, அது மிகவும் உண்மையே. "மாஸாநாம் மார்க்கசீர்ஷோஹம்'' என்று சொன்னவன் நானே யொழிய இராமனல்லன். ஆகவே மார்கழிக்குப் பெருமை என்றால் தானாகும். இஃதிருக்கட்டும். என்னைப்பற்றி நீ தாழ்வாகச் சொன்னதைச் சொல்லுகிறேன் கேள். உனக்கு நினைவிருந்தால் அதை நீயே சொல்லி விடு; மீண்டுங் கேட்டு மகிழ்கிறேன்.

அண்ணா—அறிவினால் குறைவில்லா அகல் ஞாலத்தவரறிய நெறியெல்லா மெடுத்துரைத்த கண்ணா! ஏதோ சொல்லுகிறேன். நீ தாழ்வாக நினைத்திருப்பது இதுதானோ? வேறொன்றோ என்பதைப் பிறகு நீ உண்மையாகச் சொல்லவேணும்.

ஒரு ஸமயம் நீ பிராட்டியிடம் பெருமையாகச் சொல்லிக் கொண்டாய்—"தசவர்ஷஸஹஸ்ராணி தசவர்ஷசதாநி ச, ராமோ ராஜ்யமுபாஸித்வா ☆ என்றபடி இராமன் பதினோராயிரமாண்டு பூலோகத்தில் வாழ்ந்திருந்தும் அத்யாத்ம சாஸ்த்ரமாக ஒன்று சொல்லி வைக்கவில்லை; நான் நூறுஸம்வத்ஸரந்தான் இந்நிலத்திலிருந்தேன்; உலகமெல்லாம் மெச்சும்படியான கீதாசாஸ்த்ரஞ் சொன்னேன். வேதத்திற் காட்டிலும் இதையே உயர்ந்ததாக உலகம் மதிக்கிறது'' என்று சொல்லிக்கொண்டாய். அப்போது பிராட்டி சொன்னாள்! நாதா; நீ சொன்ன கீதைக்குப் பல குறைகளுண்டு. முரட்டு ஸம்ஸ்க்ருதத்தில் சொன்னது; மிகமிக விரிவாகச் சொன்னது; கேட்டது போதும் என்று தலை குனிந்து நின்ற அர்ஜுனனை நோக்கி "பூய ஏவ மஹாபாஹோ! ச்ருணு மே பரமம் வச:'' என்றும், "இதம் து தே குஹ்யதமம் ப்ரவக்ஷ்யாமி'' என்றும் நீயே கிளப்பிக் கிளப்பிச் சொன்னது; இடையிடையில் "நமாம், துஷ்க்ருதினோ மூடா: ப்ரபத்யந்தே நராதமா:'' என்றும் "அவஜாநந்தி மாம்! மூடா:" என்றும் நிந்தித்தது, ஸ்ரீமஹாலக்ஷ்மியைப் பற்றி ஒன்றுமே பேசாதது, சண்டையிடமாட்டேனென்றவனை வலி கட்டாயப்படுத்திச் சண்டையிலே மூட்டினது; ஸகலமதஸ்தர்களும் பிடித்திழுத்துத் தங்கள் தங்களுக்கு அனுகூலமாக வியாக்கியானம் பண்ணும்படி சொன்னது; நாராயணனே பரதத்வமென்பதையும் அவன் திருவடிகளில் பண்ணும் கைங்கரியமே புருஷார்த்த மென்பதையும் காட்டிக்கொடாதது; "நாஸ்ம அச்ரத்ததாநோஸி துர்மேதாச்சாஸி பாண்டவ!, அபுத் த்யா யந்ந ஜாநீஷே! தந்மே ஸா மஹதப்ரியம் ☆ என்று முடிவில் (உத்தர கீதையில்) மிக்க வெறுப்புக்காட்டினது, என்றிப்படிப்பட்ட பல குறைகளைக் கூறினாள் பிராட்டி; அப்போது நீ சொன்ன தாவது—"கட்டின வீட்டுக்குக் குறை கூறுவது போல் ஏதோ கூறுகிறாய்; ஒரு குறையுமில்லாதபடி நீ ஒரு பிரபந்தம் செய் பார்ப்போம்'' என்றாய். அப்போது "ஸாக்ஷாத் க்ஷமாம் கருணயா கமலாமிவாந்யாம்'' என்று போற்றப்பட்ட பிராட்டி திருப்பாவையை யருளிச் செய்து 'இதைப்பார்' என்று உன் கையில் கொடுத்தாள். நீ அதை முற்றும் வாசித்து உகந்து ஏற்றுக் கொண்டாய் என்று அவதாரிகையில்சொல்லியிருக்கிறேன் இதைத் தாழ்வுரையில் சேர்த்திருக்கிறாயோ கண்ணா!

கண்ணா—என்னுள்ளத்துள்ளே உறையுமண்ணா! சில அவிவேகிகள் தாழ்வாக நினைப்பர்களேயொழிய நான் நினைக்க என்ன ப்ரஸக்தி? பட்டர் எனது நாயகியை அவளுடைய கோயில் வாசலில் நின்று துதிக்கத் தொடங்கி நாலு ச்லோகங்கள் சொல்லி திடீரென்று அங்கிருந்து அஞ்சு குழி மூன்று வாசலாலே என்னிடமோடி வந்து "ச்ரியம்! த்வத்தோபி உச்சைர் வயமிஹ பணம: ச்ருணுதராய்'' [பிராட்டியை உனக்கும் மேலே தூக்கி வைத்துத் துதிக்கப் போகிறேன், கேளாய்] என்றார். அதையே நான் தாழ்வாக நினைக்கவில்லையே. நான்

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

சொன்ன கீதையை விட என் மனைவி சொன்ன திருப்பாவைதான் உயர்ந்தது என்கிற கொள்கை எனக்கில்லையாகில் கோவில்களில் நித்யமும் கீதையைப் பாராயணம் செய்யச் சட்டையிட்டிருக்கமாட்டேனா? மார்கழியில் மட்டுமா திருப்பாவைக்கு ஏற்றம்? வருஷம் முந்நூற்றறுபது நாளும் திருப்பாவையைத்தானே கேட்டுக்களிக்கிறேனென்கும்.

அண்ணா—என் ஆராவமுதான கண்ணா! கீதையிலுள்ள குறைகளை உன் மனைவி உன்னிடம் நேரில் எடுத்துக் கூறினாளே, அக்குறைகளெல்லாம் உண்மைதானே. அக்குறைகளில் ஒன்று கூடத் திருப்பாவையில் கிடையாதென்பதும் உண்மைதானே. குறை நிறைகளை உன் வாயால் விவரித்துரைக்கக் கேட்க ஆசைப்படுகிறேன்.

கண்ணா—என்னுள்ளங்குளிரப்பேசு மண்ணா! கீதை முரட்டுஸம்ஸ்க்ருதமன்று, திருப்பாவை செவிக்கினிய செஞ்சொல்லான செந்திறந்த தமிழோசையன்று என்பேனா? பதினெட்டு அத்யாயங்களும் எழுநூறு சுலோகங்களுமாகக்ரந்த விஸ்தாரஞ் செய்த குறையை இல்லையென்பேனா? வேதமனைத்துக்கும் வித்தாக முப்பது பாட்டுச்சொன்ன பெருமையை மறுக்க முடியுமோ? மூடனை சிஷ்யனுக்குச் சொன்ன என்னைப்போலல்லாமல் ஸர்வஜ்ஞனென்று பேர்பெற்ற என்னையே சிஷ்யனாக்கி 'பொருள் கேளாய்' என்று உணர்த்தின அவளுடைய பெருமையை மறைக்கப் போமோ? இடையிடையில் என்னுடைய வருத்தத்தை நானே சொல்லிக் கொண்டது போலல்லாமல்※ வருத்தமுந்தீர்ந்து மகிழ்ந்தென்றும் கூடியிருந்து குளிர்ந்தென்றும்நெஞ்சு கனிந்து சொன்ன அவளுடையசொல்லழகைச் சிந்தியாதிருக்க முடியுமோ? நப்பின்னை கொங்கைமேல் வைத்துக்கிடந்த மலர்மார்பா! என்று என்னையெழுப்பினவள் எனக்கு ஏற்றம் தந்த பிராட்டியை ஓரிடத்தும் ப்ரஸ்தாவியாத என்னைக்காட்டிலும் எவ்வளவோ மேம்பட்டவளல்லவா? தஸ்மாத் யுத்யஸ்வ பாரத! என்று வாய்க்குவாய் யுத்தம் பண்ணத் தூண்டினகீதையானது பாரோர் புகழவும் உய்யுமாறெண்ணியுகக்கவும் நீங்காத செல்வம் நிறையவும் எங்குந்திருவருள் பெற்றின்புறவும் சொன்ன திருப்பாவையின் முன்னே நிற்கவல்லதோ? நாராயணனாகிற பரதத்வத்தையும் கைங்கர்யமாகிற பரமபுருஷார்த்தத்தையும் பேசாதது நம் கீதையென்பதை யறியேனா? பரமைகாந்திகளே பரிக்ரஹிக்க நின்ற திருப்பாவைக்கு கண்டபேர்களும் பிடித்திழுக்க நின்ற கீதை ஒவ்வாதுதான்; ஆயினும் அறிவினால் குறைவில்லா அகல் ஞாலத்தவரறிய நெறியெல்லா மெடுத்துரைத்த நிறை ஞானத் தொருமூர்த்தி யென்று நம்மாழ்வாரும், ஆயன் துவரைக்கோனாய் நின்றமாயன் அன்றோதியவாக்கதனைக் கல்லார் ஏதிலராம் மெய்ஞ்ஞானமில் என்று திருமழிசைப் பிரானும் புகழ்ந்த ஏற்ற முண்டு கீதைக்கு என்று ஒருவாறு தேறுதலடைகிறேன் அண்ணா!

அண்ணா—வெண்சங்க மொன்றேந்திய கண்ணா! அவதாரிகையின் சர்ச்சை போதும்; முதற் பாட்டில் கேட்டவற்றில் ஏதேனுஞ் சொல்லு கேட்போம். சுருக்கமாக இரண்டொரு வார்த்தை சொன்னாலும் போதும்.

கண்ணா—என் மனம் வாட நினையாத அண்ணா! முதற் பாட்டில் *மதி நிறைந்த நன்னாளால்* என்றவிடத்து மதியென்பதற்கு சந்திரனென்ற பொருளைச் சொல்லி விவரித்துவிட்டு, புத்திர்மனீஷா திஷணா தீ: ப்ரஜ்ஞா' சேமுஷீமதி:※ என்கிற கோசத்தைக்கொண்டு புத்தி வாசகமான ஸம்ஸ்க்ருதபதமாகப் பேசி, அதற்குமேல் "ஸ்ம்ருதிர் வ்யதீதவிஷயா மதிராகாமிகோசரா, புத்திஸ் தாத்காலிகீ ப்ரோக்தா ப்ரஜ்ஞா த்ரைகாலிகீ மதா." என்கிற விசேஷ

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

வசனத்தைக் காட்டி "மதியினால் குறள்மாணாய் உலகிரந்த கள்வற்கு" என்கிற திருவாய்மொழிப் பாசுரங்கொண்டு ஸமந்வயப்படுத்தினாய்; அதை மறுபடியும் உன் வாயில் கேட்க விரும்புகிறேன். சொல்லவேணுமண்ணா!

அண்ணா—கனிவார் வீட்டின்பமான கண்ணா! நம்மாழ்வார் பராங்குசநாயகியாகித் தூதுவிடுகிற அஞ்சிறையமடநாராய்பதிகத்திலுள்ள பாசுரம் "மதியினால் குறள் மாணாயுலகிரந்த கள்வர்க்கு" என்பது; மஹாபலிபக்கலில் மாண்குறள் கோலப்பிரானாய் யாசகம் செய்வதற்கு சென்றதானது அந்தச் செயலாலே என்போல்வாரையீடுபடுத்திக் கொள்வதற்காகவேயொழிய இந்திரனுடைய காரியஞ்செய்வதற்காகவன்று; என்பதாகவொரு சுவைமிக்கபொருள். இது *மதியினால்* என்பதனால் பெறுவிக்கும் பொருள் என்றேன். இது ஸாமான்ய புத்திகளுக்கு ரஸிக்கமாட்டாது. அந்த கள்வன் நீதானே, உனக்கு ரஸித்திருக்கும். அதனால்தான் திரும்பவும் கேட்க விரும்பினாய் போலும். (தொடரும்)

சென்னை கவர்னர் சந்திப்பு

உலகம் போற்றும் உயர்பதவியில் வாழும் சென்னை கவர்னர் உயர்திரு. K. K. ஷா (Shah) என்பவர் வேதத்தில் இயற்கையான அபிமானமுடையவர். இவர் பூனா நகரத்தைச் சேர்ந்தவராம். வேதத்தில் சில ஆராய்ச்சிகள் செய்ய முன்வந்திருப்பவரென்று தெரிகிறது. வேதத்தில் என்னுடைய ஆராய்ச்சி நூல்கள் வெளிவந்திருப்பதைக் கேள்விப்பட்ட இப்பெரியார் சென்ற மார்கழிமாதத்தில் நான் சென்னையில் வாழ்வதையறிந்து ஒருநாள் சந்திக்கவேணுமென்னுமவாவைத் தெரிவித்தார். நமது ஸத்காலக்ஷேப ஸபைத்தலைவரான ஸ்ரீமான் ஊரா ஜகன்னாத செட்டியாரவர்கள், ஸ்ரீ உ. வே A. ஸ்ரீநிவாஸய்யங்கார் முதலானவர்களிடம். 8—1—72 மாலை 4 மணிக்கு ராஜபவனத்தில் சந்திப்பதாக நிர்ணயிக்கப்பட்டது. அன்று 4 மணி முதல் 5-15 வரை சந்தித்து வார்த்தையாட வாய்த்தது. ஸம்ஸ்க்ருத பாஷையிலும் ஹிந்தீ பாஷையிலும் நன்கு பேசப்பழகியிருக்கிறார். பரத்துவம் அடியோடு தெரியாமல் மிகவும் ஸௌம்யமாகப்பேசி மனத்தைக் கவர்ந்தார். ஸ்ரீ A. ராமாநுஜாசாரியர் B. A., C. ஸுப்ராயலு செட்டியார் Free India Editor முதலானோர் என்னோடுகூட வந்திருந்தபடியால் அவர்களோடும் ஆங்கிலத்தில் லோகாபிராமமாகப் பேசினார்.

வேதசப்தங்களை உச்சாரணம் செய்யும் வகையைப்பற்றியும் வைதிகபதங்களில் ஸ்வரபேதங்கள் ஏற்பட்டிருக்கும்படிகளைப் பற்றியும் சர்ச்சை செய்தார் கவர்னர். நான் வடமொழியில் இயற்றி வெளியிட்டிருந்த *பதபாட பரித்ராணம், பதபாடபரிசுத்தி, ஸ்வரபேதஸித்தாஞ்ஜனம்* முதலான சில வைதிக நூல்களைக் கையில் கொண்டு போயிருந்தபடியால் அவற்றில் நின்று சிற்சில விடங்களை வாசித்து விளக்கும்படி கட்டளையிட, ஸுபந்தபதங்களும் திஙந்தபதங்களுமான பத்தெட்டு பதங்களைப் பற்றின எனது ஆராய்ச்சிகளை வாசித்து விளக்கினேன். வடநாட்டில் தானறிந்த சில வைதிகர்களும் இவற்றை வாசிக்கச்செய்ய அவர்களுக்கு அனுப்பவேண்டுமென்று சொல்லி அந்நூல்களைப் பெற்றுக்கொண்டார். விரைவில் நான் தெரிவிக்கும்போது மீண்டும் சந்திக்கவேணுமென்று சொல்லி எங்களுக்கு விடைதந்தார். P. B. A.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

உபந்யாஸக ஸௌபாக்ய மாலையில்
பதினொன்காவது ஸ்தபகம்

8. ஸஹஸ்ரநாமராமாயணம்.

"ராமாவதாரமென்றால் பட்டர் போர பக்ஷபதித்திருப்பர்" என்று நம் ஆசார்ய கோஷ்டியில் ஸுப்ரஸித்தமாகையாலே ஸ்ரீராம பக்ஷபாதியான பட்டர் தம்முடைய ஸஹஸ்ரநாமபாஷ்யத்தில் ✳ராமோ விராமோ விரத: ✳ இத்யாதி திருநாமங்களுக்கு முன்னே "பரர்த்தி: பரமஸ்பஷ்ட:" என்னுமிடத்தில் "அத ம்ருதஸஞ்ஜீவநம் ராமசரிதம்" என்றருளிச் செய்துள்ளார். (பரர்த்தி:) என்கிற திருநாமம் முதலாக ம்ருதஸஞ்ஜீவினியான ராமகதை சொல்லப்படுகிறது என்றபடி. பரர்த்தி:, பரமஸ்பஷ்ட: துஷ்ட: புஷ்ட: சுபேக்ஷண: ராம: விராம: விரத: மார்க்க: நேய: நய: அநய:, வீர: சக்திமதாம் ச்ரேஷ்ட: தர்ம: தர்மவிதுத்தம:—என்கிற பதினாறு திருநாமங்களும் ராம சரித்திரங்களைத் தெரிவிப்பனவாகத் திருவுள்ளம் பற்றினபடி. இத்திருநாமங்களை விவரிக்கும் முகத்தால் ஸ்ரீராம குணாநுபவம் செய்கிறேன். ஆகவே இக்கட்டுரைக்கு 'ஸஹஸ்ரநாமராமாயணம்' என்று மகுடமிட்டேன்.

1. பரர்த்தி: என்ற திருநாம விவரணம்

— பரர்த்தி: = 'பரா ருத்தி: யஸ்மிந் ஸ:' ருத்தியாவது ஸம்ருத்தி மிக்க ஸம்ருத்தியையுடையவனென்றபடி. செல்வம் மல்கியிருப்பவனென்கை. ஆழ்வார்கள் பலவிடங்களிலும் ✳செல்வம் மல்கு குடித் திருவிண்ணகர் ✳செல்வம் மல்கியவன்கிடந்த திருக்கோவலூர் *செல்வம் மல்கு தென்திருக்குடந்தை✳ என்றாப்போலே யருளிச்செய்கிறார்கள்; இவ்விடங்களில் கல்யாணகுண ஸம்ருத்தியையே முக்கியமான செல்வமாக வியாக்கியானித்தருளுகிறார்கள். "பவாந் ஸர்வத்ரைவ து அகணித மஹாமங்கலகுண:" என்று ஆழ்வானருளிச்செய்தபடி எம்பெருமானுடைய ரூபங்களெல்லாவற்றிலுமே குணபூர்த்தி குறையற்றிருந்தாலும் ஸ்ரீராமாவதாரமொன்றில்தான் குணபௌஷ்கல்யம் விசேஷித்துக் காணலாயிருக்கும். ஸ்ரீராமாயணத்தில் கயிறுபோட்டு எந்த இடமெடுத்தாலும் அவ்வவ்விடமெல்லாம் குணகீர்த்தன ப்ரசுரமாகவே காணலாகும். ஸ்ரீராமாயணத்தின் உபக்ரமமே குணங்களைப்பற்றின வினாவிடை. சக்ரவர்த்தி திருக்குமாரனை முடிசூட்டித் தான் தவம் புரியப் போவதாக அறுதியிட்டு மஹாஸபைகூட்டி ப்ரஜைகளின் அபிப்ராயத்தை வினவும்போது "அநேகவர்ஷஸாஹஸ்ரோ வ்ருத்தஸ் த்வமஸி பார்த்திவ!"—கிழவா! ஒழிந்து போ, கிழவா! ஒழிந்து போ என்றார்கள். பிறகு சக்ரவர்த்தி பிரஜைகளை நோக்கிக் கேட்கிறான். 'உங்களைக் கேளாமலே நான் வஸிஷ்டாதிகளோடு மட்டும் கலந்து முடிவு செய்யலாமாயிருக்கச் செய்தேயும் உங்களுக்கொரு பெருமை கொடுக்க வேண்டிக் கேட்டேன்; நீங்களும் பெருந்தன்மையுடன் விடை கூறியிருக்கலாம். 'உமக்கு இஷ்டமானபடி செய்க' என்று விநயமஸ்ருணமாகச் சொல்லியிருக்கலாம். அதைவிட்டு, இதுவரையில் நான் அதர்மராஜ்யம் செய்ததுபோலவும், நீங்கள் என்னைவிட்டு நீங்குவதற்கு ஸமயம்பார்த்திருந்தது போலவுங் காட்டி என்

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

னிடத்திலே மிக்க வெறுப்புத் தோற்றப் பேசினீர்களே ,நான் செய்த தவறென்ன என்று.கேட்க. அதற்குப் பிரஜைகளின் விடை யாதெனில்; [பஹவோ ந்ருப! கல்யாண குண: புத்ரஸ்ய ஸந்தி தே] மஹாப்ரபோ! உம்மிடத்தில் ஒரு குறைகண்டு சொன்னோ மல்லோம்; நீர் பெற்ற பிள்ளை *குணநாமாகரோ மஹான்* என்னும்படி யிருக்கை யாலே அவன் கோற்கீழே வாழவேணுமென்னுமாசையொழிய வேறில்லை என்றார் கள். ஸ்ரீராம குணங்களை வாயாரச் சொல்லிச் சொல்லிக் கண்ணீர் பெருக்குகிறார் கள். (அயோத். இரண்டாவது ஸர்க்கம் காண்க.) இங்ஙனே காண்டந்தோறும் ராமகுணங்கள் ஸர்க்கம் ஸர்க்கமாக ஒவ்வொருவர் முகமாய்ப் பேசப்படுகையாலே இப்படிப்பட்ட குணஸம்ருத்தியையிட்டுப் பரர்த்தி: என்கிறது. இனி "பரேஷாம் ருத் திரேவ (ஸவஸ்ய) ருத்தி: யஸ்ய" என்று கொண்டு பரஸம்ருத்தியே பேறாயிருப்ப வன் இராமன் என்றுங் கொள்ளத்தகும். ஸுக்ரீவ விபீஷணாதிகளுக்குப் பட்டாபி ஷேகம் நடத்திவைக்காமல் தான் முடிசூடுவதில்லை யென்றிருந்தபடியால் இத் திருக்குணம் நன்கு விளங்கும். "த்வயி கிஞ்சித் ஸமாபந்நே கிம் கார்யம் ஸீதயா மம" என்றவிடம் பரஸம்ருத்தியையே பேணுமவர் பெருமாள் என்பதற்கு முக்கிய மான சான்றாகும். லங்காத்வாரத்தில் பெருமாள் எழுந்தருளி நிற்கச்செய்தே ராவணன் கோபுரசிகரத்திலே வந்து தோற்றினவாறே 'ராஜத்ரோஹியான பையல் பெருமாள் திருமுன்பே நிற்கையாவதென்?' என்று ஸுக்ரீவமஹாராஜர் அவன் மேலே யெழப்பாய்ந்து வென்று வந்தபோது பெருமாள் அருளிச்செய்கிறார் [ஏவம் ஸாஹஸ யுக்தாநி ந குர்வந்தி ஜநேச்வரா:] சிலர்மேல் விழவேண்டினால் பரிகர பூதரையன்றோ ஏவவேண்டுவது; தலைவராயிருப்பாரோ மேல்விழுவது? [த்வயி கிஞ்சித் ஸமாபந்நே கிம்கார்யம் ஸீதயா மம?] பிராட்டியைப் பெறுவதற்காகவன்றோ நாம் இத் தனை பாடுபடுவது; உம்முடைய பெருமைக்கு ஒரு குறை விளையுமாயின் அந்தப் பிராட்டியினால் தான் எனக்கென்ன? என்று இங்ஙனே சொன்ன பெருமாள் பரஸம் ருத்திக்கு விரோதமின்றியிலே ஸ்வஸம்ருத்தியைப் பேணுமவரென்று விளங்க நின்றதாயிற்று. இத்திருநாமத்தை இன்னமும் விவரிக்கலாம். போதும்.

2. பரமஸ்பஷ்ட: என்ற திருநாமத்தின் விவரணம்

✳ ந சக்ஷுஷா பச்யதி கச்சநைநம் ✳ ந மாம்ஸ சக்ஷு ரபிவீக்ஷதே தம் ✳ *என்றேனும் கட்கண்ணால் காணுதவவ்வுரு * இத்யாதிப்படியே ஒரு வர் கண்ணுக்கும் காணவொண்ணாதிருந்த வடிவத்தை அனைவரும் கண்டுகளிக்கும் படி மிகவும் ஸ்பஷ்டமாக்கிக் கொடுத்தவ னென்கை. ஆழ்வான் அதிமாநுஷ ஸ்தவத்தில் (10) "க்ஷோதீயஸோபி ஹி ஜநஸ்ய க்ருதே க்ருதீ த்வம் அத்ராவதீர்ய நநு லோசநகோசரோபூ:" என்றருளிச் செய்ததை இங்கே அநுஸந்திப்பது. பரம ஸ்பஷ்ட: என்பதற்கு-பரமத்வம் ஸ்பஷ்டமாயிருக்கப் பெற்றவர் என்கிற பொருள் பட்டருடைய பாஷ்யத்தில் விளங்குமது. 'பரத்துவத்தை யொளித்து வந்து அவ தரித்திருக்கச் செய்தேயும் அது சிலர்க்கு ஸ்பஷ்டமாக விளங்கா நின்றதென் பதை ஸ்ரீராமாயணத்தினாலறிகிறோம். பெருமாளுடைய வநவாஸப்ரஸங்கத்தில் கிலேசப்படா நின்ற கௌஸல்யாதேவியைத் தேற்றுகின்ற ஸுமித்திரை "ஸூர்யஸ்யாபி பவேத் ஸூர்ய: ஹ்யக்நேரக்நி: ப்ரபோ: ப்ரபு:" இத்யாதியாலே பெருமா ளுடைய பரத்துவத்தைத் தான் ஸ்பஷ்டமாகக் கண்டறிந்து பேசுகிறாள். இராவணன்

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

மாண்ட பிறகு ப்ரேத பூமியிலே வந்து புலம்புகின்ற மந்தோதரி * வ்யக்த மேஷ மஹாயோகீ பரமாத்மா ஸநாதந:, அநாதி மத்யநிதந:.........தமஸ: பரமோ தாதா சங்கசக்ர கதாதர:. ஸ்ரீவத்ஸவக்ஷா நித்யஸ்ரீ: அஜய்யச் சாச்வதோ த்ருவ: மாநுஷம் ரூபமாஸ்தாய விஷ்ணுஸ் ஸத்ய பராக்ரம:.* இத்தியாதியாலே பெருமாளுடைய பரத்துவத்தை அதிஸ்பஷ்டமாகக் கண்டு பேசுகிருள். பம்பாதீரத்தில் முதன்முதலாகப் பெருமாளைக் காணவந்த திருவடி "ஆயதாச் ச ஸுவ்ருத்தாச் ச பாஹவ: பரிகோபமா:, ஸர்வபூஷண பூஷார்ஹா: கிமர்த்தம் ந விபூஷிதா: ?*" என்று கேட்கிருர். இங்கு 'ஆயதௌ ச ஸுவ்ருத்தௌ ச பாஹூ தே பரிகோபமௌ' என்று த்விவசனமாக சுலோகம் கூடுமதாயிருக்க பஹுவசன மிட்டுச் சொன்னதுபற்றி கோவிந்தராஜர் எழுதுகிருர்.—ஹநுமதோ பக்தத்வேந தஸ்ய சதுர்ப்புஜவேஷேண த்ருச்யோபவத்" என்று (அதாவது) திருவடி பரம பக்தராகையாலே அவர்க்கு நிஜரூபத்தைக்காட்டினுரேன்றபடி. அன்றியும் ஸமுத்ர சரணுகதி ப்ரகரணத்தில் பெரும்மாள் தலையணையாக வைத்துக்கொண்ட பாஹுவை வருணிக்கின்ற வான்மீகிமுனிவர் "பூஜை: பரமநாரீணும் அபிம்ருஷ்ட மநேகதா" என்கிருர். இங்கு பரமநாரிகளாகச் சொன்னது ஸ்ரீதேவீ பூதேவீ நீலாதேவிகளை யென்று வியாக்கியானம். ஆகவே வான்மீகி முனிவரும் பெருமாளுடைய பரத்வவேஷத்தை ஸ்பஷ்டமாகக் கண்டவரென்று விளங்கும். ஆக இவ்வளவால் பெருமாளுடைய பரமஸ்பஷ்டத்வம் நிரூபிதமாயிற்று. ... ... *

3 துஷ்ட: என்ற திருநாமத்தின் விவரணம்

துஷ்ட : என்றது ஸந்துஷ்ட: என்றபடி. பெருமாளவதாரத்தைப் பேசுகின்ற நம்மாழ்வார் * நாட்டில் பிறந்து படாதனபட்டு மனிசர்க்காய் * என்கிருர். "கர்மவச்யர்களான ஸம்ஸாரிகளும் படாத கஷ்டங்களை யெல்லாம்பட்டு" என்கிருர்கள் வியாக்க்யாதாக்கள். " துக்க ஸம்வேதநாயைவ ராமே சைதந்ய மாஹிதம்" [உத்தரராமசரிதே.] என்று பெருமாள் தாமே சொன்னதாக பவபூதிகவி யெழுதுகிருர். இவற்ருல் பெருமாளுடைய திருவுள்ளம் ஸந்தோஷமற்றிருக்கும் போலுமென்று நினைக்க இடமுள்ளது. உண்மை அப்படியில்லை. ஸம்ஸாரிகளின் ஸமுஜ்ஜீவனர்த்தமாக வந்து அவதரிக்கப் பெற்ருேமிறே யென்று திருவுள்ள முகந்தேயிருப்பர். முடி புனைந்து நாட்டையாளப் பாரித்திருக்கையில் சடை புனைந்து மரவுரியுடுத்துக் காட்டுக்குச் செல்ல நியமனம் பெற்றபோது எவ்வளவோ துக்கமாகத் தானே யிருந்திருக்குமென்று பலர் நினைக்கக் கூடும் அப்போதும் பரம ஸந்தோஷத்தையே யாயிற்று பெருமாள் கொண்டது. *ராஜ்யம் வா வநவாஸோ வா வநவாஸோ மஹோதய: " என்றவரன்ருே பெருமாள். இவ்விடத்தில் கம்பருடைய வாக்கு மிக வற்புதமானது. " இப்பொழு தெம்மனோரால் இயம்புதற்கெளிதோ? யாரும் செப்பருங் குணத்திராமன் திருமுகச் செவ்வி நோக்கின். ஒப்பதே முன்பு பின்பு வாசக முரைக்கக் கேட்ட, அப்பொழுதலர்ந்த செந்தாமரையினை வென்றதம்மா" என்பது அவருடைய ஆச்சரியமான செய்யுள் வனவாஸக் கட்டளை பெறுவதற்கு முன்னே இராமபிரானுடைய திருமுக மண்டலம் தாமரை போன்றிருந்ததாம்; அக்கட்டளை பெற்றவாறே அத்திருமுகம் அப்போதலர்ந்த செந்தாமரையை வென்றிட்டதாம். கொடிய வனம் போக நேர்ந்ததே யென்று சிறிதும் சோகியாமல்,

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

புண்ணிய புனல்களாடவும் புண்ணிய புருஷர்களைத் தொழவும் வாய்ப்பு கிடைத் தமைக்குப் பரம ஸந்தோஷ மெய்தினனென்கை. *உத்ஸவேஷு ச ஸர்வேஷு பிதேவ பரி துஷ்யதி* என்று பௌரஜனங்கள் நேரில் கண்டு சொன்னபடியே தனது நாட்டி லுள்ளவர்களுக்கு நேரும் ஸந்தோஷத்தைத் தன்னுடைய ஸந்தோஷமாகக் கொண்டு மகிழ்பவன். "அபிஷிச்ய விபீஷணம் விஜ்வர: ப்ரமுமோத ஹ' என்கிற படியே அன்பர்களை ஸந்தோஷப்படுத்தித் தான் ஸந்தோஷாதிசய மடைபவன்.... *

4. புஷ்ட: என்ற திருநாமத்தின் விவரணம்

கீழே துஷ்ட: என்கிற திருநாமத்தினால் சொன்ன ஸந்துஷ்டதையை நன்கு நிலைநாட்டுகின்றது இந்தத் திருநாமம். தான் அடையும் ஸந்தோஷம் வடிவிலே காணலாம்படி யிருப்பவன். 'உள்ளத்தின் மகிழ்ச்சி உடலிலே தெரியும்' என்பராதலால் ஹ்ருதயகதமான ஸந்தோஷத்தைத் திருமேனி கோட்சொல்லித் தரக்கடவதாயிருக்கும். வனவாஸக் கட்டளை ப்ராப்தமானது "வநவாஸோ மஹோதய:" என்று சொன்னது க்ருத்ரிமமென்று நினைக்கவொண்ணாதபடி திரு மேனி புகர்த்துக் காட்டுமென்கை. வனவாஸம் ப்ராப்தமாவது பரம ஸந்தோஷத் திற்கே ஹேதுவென்று சொன்னதைச் சிறிது சோதிக்குமளவில் அது அஹ்ருத யோக்தியே யொழியே ஸஹ்ருதயோக்தி யன்றென்று அறுதியிடலாமா யிருக்கும். (எங்ஙனேயென்னில்) மேலே ஆரண்யகாண்டத்தில் ஸீதாவியோகம் நேர்ந்தபோது துக்கபரவசராய்க் கதறுகின்ற பெருமாள் *ராஜ்யாத் ப்ரம்சோ வநே வாஸோ நஷ்டா ஸீதா ஹதோ த்விஜ:, ஈத்ருசீயம் மமாலக்ஷ்மீ: நிர்தஹேதபி பாவகம்.* என்று சொல்லிப் புலம்புகிறார். 'ஐயோ! ராஜ்யத்தை யிழந்தேனே! காட்டிலே வந்து வஸிக்கவும் நேர்ந்ததே!' என்று சொல்லுவது 'வநவாஸோ மஹோதய:, என்றதற்கு நேர்முரணல்லவா? வனவாஸக்கட்டளை ஸந்தோஷகரமா யிருந்தால் 'ராஜ்யாத் ப்ரம்ச:' என்றும் 'வநேவாஸ: என்றுஞ் சொல்ல வாயெழும்புமோ? ஈத்ருசீ யம் மம அலக்ஷ்மீ:' என்று ராஜ்யப்ரம்ச வனவாஸங்களை தௌர்ப்பாக்ய மாகவன்றோ சொல்லு கிறார். இவை பொருந்தும்படி எங்ஙனேயென்று விசிகித்ஸை பண்ணுவர்கள். இதற்கு நம்பிள்ளை யருளிச்செய்வது பாரீர்;

> "*ராஜ்யநாசோபகர்ஷதி* வநவாஸோ மஹோதய:* என்று சொல்லிப் போந்தவற்றை இப்போது அனர்த்தமாகச் சொல்லுகிற தென்னென்னில், ஆச்ரித ஸம்ச்லேஷத்துக்கும் ரிஷிகளை நோக்குகைக்கு மென்றிறே போந் தது; அத்தோடே விரோதிக்கையாலே சொல்லுகிறார். பிராட்டியைப் பிரி கையாலும் பெரியவுடையாரை யிழக்கையாலும் இவற்றுக்கு அடியான வையும் இப்போது அனர்த்தமாகத் தோற்றினபடி."

என்பது நம்பிள்ளை ஸ்ரீஸூக்தி. (இதைச் சிறிது விவரிக்கிறேன்) வனத்திற்குப் புறப் படும்போது எதனால் ஸந்தோஷமென்னில்; பிராட்டியோடு ஏகாந்தவாஸம் பண்ணப் பெறுவோம், பரமபாகவதர்களோடே ஸஹவாஸம் பண்ணப்பெறுவோம் என்றிங்ஙனே பாரித்ததனால் ஸந்தோஷமுண்டாயிற்று. பாரித்தபடியே பேறு கிடைத்து வந்தது. *வைதேஹி! ரமஸே கச்சித் சித்ரகூடே மயா ஸஹ* என்று வாய் வெருவும்படி பிராட்டியோடே கூடியிருந்து குளிரப்பெற்றது. *இஹ வத்ஸ்யாமி

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸௌமித்ரே! ஸார்த்தமேதேந பக்ஷிணு* என்று ஜடாயு மஹாராஜருடைய சிறகின் கீழே யொதுங்கி வர்த்திக்கவும் பெற்றது. இந்த நிலைமையில் ''ஹா ஹந்த ஹந்த நலிநீம் கஜ உஜ்ஜஹார'' என்னும்படியாகப் பிராட்டியைப் பிரியவும் ஜடாயுமஹா ராஜரை அறவே யிழக்கவும் நேர்ந்தது. துக்கம் சொல்லுவித்த வார்த்தை யன்றோ ''ராஜ்யாத் ப்ரம்சோ வநே வாஸ:'' என்பது, இதனால் காட்டுக்குப் புறப்படும் போதே ஸந்தோஷமில்லாமல் வருந்தியே புறப்பட்டதாக எண்ணத்தகுமோ? பரம குதூஹலத்தோடு மஹோத்ஸவம் ஸேவிக்கத் திருவேங்கடமலை சென்றவர் அங்கு இடமும் சோறும் தண்ணீரும் பெறுமல் அப்பன் ஸேவையும் பெறுமல் வெயிலி லும் மழையிலும் பரிதபித்துக் கிடக்க நேர்ந்ததென்று கொள்வோம்; அப்போது 'ஏதுக்கு வீட்டைவிட்டு இங்கே வந்து வருந்துகிறோம்!' என்று தளர்ந்தால் இதனால் ஊரைவிட்டுப் புறப்படும்போதிருந்த குதூஹலத்தை இல்லைசெய்யவொண்ணுமோ? இலங்கை சென்ற திருவடி அசோகவனத்தில் பிராட்டியைக் கண்டவாறே '' அநயா ஹீந: ப்ரபு: தாரயதி ஆத்மநோ தேஹம் ந சோகேந அவஸீததி' என்று சொன்னது பெருமாளை கர்ஹிக்குமாபோலே யிருந்தாலும் (புஷ்ட:) என்னுமிந்தத் திருநாமத்தை வியாக்கியானம் பண்ணுமாபோலவே யிராநின்றது 'வாடாமல் வதங்காமல் புஷ்ட ராகவே யிருக்கிறார் பெருமாள்' என்று காட்டினபடியாகக் கொள்ளலாம். இல்லை யாகில் 'ஜீவதி' என்று மூன்றெழுத்தோடே முடிக்கலாமே; 'தாரயதி ஆத்மநோ தேஹம்' என்ற விரிவு தேஹபுஷ்டியை அந்தரங்கமாகக் காட்டவே போலும். ... *

5. சுபேக்ஷண: என்ற திருநாமத்தின் விவரணம்

பெருமாளுடைய திருக்கண்ணழகிலே யீடுபட்டவர்கள் சக்ரவர்த்தியும் சபரியும் திருவடியுமாவர்கள். 'என் வேள்வியைக்காக்க உன் பிள்ளையைப் போரவிடாய்; என்று விச்வாமித்ர முனிவன் வேண்டினபோது *ஊநஷோடசவர்ஷோ மே ராமோ ராஜீவலோசந:* என்று விடையிறுத்த சக்ரவர்த்தியின் கருத்துகள் பலவுண்டு' அவற்றுள் ஒரு கருத்து—இக்கண்ணழகனை விட்டுப் பிரிந்து எங்ஙனம் தரித்திருப்பே னென்கை: சபரி தன்னாச்ரமத்தேறப் போந்த பெருமாளைக் கண்டவாறே *சக்ஷுஷா தவ ஸௌம்யேந பூதாஸ்மி ரகுநந்தந!* என்று அவருடைய கண்ணழகிலே தான் ஈடுபட்டமையைத் தெரிவித்துக்கொண்டாள். இவற்றுக்கெல்லாம் மேம்பட்டது திருவடியின் வார்த்தை அதாகிறது [ராம: கமலபத்ராக்ஷஸ் ஸர்வஸத்வமநோஹர:*] திருவடி யோடு ஸம்பாஷணை செய்யும் பிராட்டி ''யாநி ராமஸ்ய சிஹ்நாநி...தாநி பூயஸ் ஸமாசக்ஷ்வ ந மாம் சோக: ப்ரதக்ஷ்யதி'' என்று பெருமாளுடைய அடையாளங்களைச் சொல்லும்படி கேட்டவாறே முந்துறமுன்னம் '' ராம: கமல பத்ராக்ஷ:'' என்றான். அக்கண்ணழகு செய்யுமது என்? என்ன; [ஸர்வஸத்வமநோஹர:] பிராணிகளென்று பேர் பெற்றாரெல்லாருடையவும் நெஞ்சைக் கொள்ளைகொள்ளுமதாயிற்று அவ்வழகு என் கிறார் திருவடி. இங்கே விமர்சிக்கவேணும்; திருவடி பெருமாளுடைய கண்ணழகை ஒரு பெரிய நகரத்திலே கண்டாரல்லர். நிர்ஜநமானதொரு வனத்திலே ஒரு மூலையிலே கண்டு வைத்து 'ஸர்வஸத்வ மநோஹர:, என்று எதுகொண்டு சொல்லிற்றென்று ஆராயவேணும். இங்கு நம்பிள்ளை யருளிச் செய்வது, ''திர்யக் ஜாதியனைப் பணையோடு பணைதத்தித் திரிகிற என்னுடைய நெஞ்சையும் அபஹரித்ததே'' என்று இத்தால் பெருமாளுடைய கண்ணழகு ஸர்வ ஸத்வமநோஹர மென்னுமிடம்

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

கைமுதிக ந்யாயஸித்தமென்கை. இதைக்கணிசித்தே கம்பர், அனுமன் இராம பிரானைக் காணும்போதே " மஞ்செனத்திரண்ட கோலமேனிய !, மகளிர்க்கெல்லாம் நஞ்செனத் தகையவாகி நளிரிரும்பனிக்குத் தேம்பாக், கஞ்சமொத்தலர்ந்த கண்ண !" என்று கூறினதாகப் பாடினர். (சுபேக்ஷண :) இதற்கு பாஷ்யமருளிச் செய்யாநின்ற பட்டர் "ஸ்வகர்த்ருகம் ஸ்வகர்மகஞ் ச தர்சநம் அதிசுபம் அஸ்ய" என்பதோர் அர்த்தமுமருளிச்செய்கிருர். இராமனைப் பிறர் காண்பதும் இனிது, இராமன் பிறரைக் காண்பதும் இனிது என்றதாயிற்று. ஈக்ஷண சப்தமானது கண் என்கிற பொருளையும், காண்கையென்கிற பொருளையும் காட்டவல்லது. கண் என்கிற பொருளைக்கொண்டு கீழே விவரணம் செய்தேன். இப்போது காண்கையென்கிற பொருள்கொண்டு விவரிக்கிறேன். [*யச் ச ராமம் ந பச்யேத் து யஞ்ச ராமோ ந பச்யதி. நிந்திதஸ் ஸ வஸேல்லோகே ஸ்வாத்மாப்யேநம் விகர்ஹதே *] (ஸ்ரீ ரா. அயோ. 17-14) இராமனைக் காணுதவனும் இராமனுல் காணப்படாதவனுய் உலகில் நிந்திக்கப்பட்டவனுவன் ; உலகத்தார் நிந்திப்பது கிடக்கட்டும் ; தன்னைத்தானே நிந்தித்துக் கொள்ளவேண்டியதுமாகும் என்றபடி. இதனுல் இராமனைக் காண்பதுபோல இராமனுல் காணப்பெறுவதும் புருஷார்த்தமென்று தேறுவதால் சுபேக்ஷண : என்பதற்கு இருவகைப் பொருளையும் பட்டர் திருவுள்ளம் பற்றினது சாலச் சிறக்கும். இந்த சுபேக்ஷண மஹார்த்த ப்ரஸ்தாவத்தில், அசோகவனத்தில் புலம்பாநின்ற பிராட்டி "நம் பத்மதளபத்ராக்ஷம் ஸிம்ஹ விக்ராந்த காமிநம். தந்யா : பச்யந்தி மே நாதம் க்ருதஜ்ஞம் ப்ரிய வாதிநம்." என்று சொன்ன விந்த சுலோகமும் சிந்தைசெய்யத் தக்கது. இதில் பத்மதளபத்ராக்ஷ மென்றுள்ளது. இங்கு பத்மதளமென்ருே பத்மபத்ரமென்ருே ஒன்று சொன்னுல் போதும் ; "பத்ரம் பலாசம் ச்சதனம் தளம் பர்ணம் ச்சத : புமாந்" என்ற அமரகோசத்தின்படி தளம் பத்ரம் என்பன பர்யாயமே யாதலால் தளபத்ராக்ஷ மென்று இரண்டையும் கூட்டிச் சொன்னது புநருக்தமாகாதோவென்று சிலர் சங்கிப்பதுண்டு. சங்கை யுக்தமானதே. இங்குப் பெரியார் கூறும் ஸமாதானம் சுவை மிக்கது. வடமொழியில் அக்ஷமென்கிற சொல்லுக்கு "அக்ஷமிந்த்ரிய காயயோ :" என்கிற நிகண்டின்படி கண்ணென்றும் வடிவென்றும் இருபொருள் களுள்ளமை ப்ரஸித்தம். இரட்டுறமொழிதலென்னும் தமிழ் மரியாதையினுல் பத்மதளபத்ராக்ஷ மென்றவிவ்விடத்தில் அக்ஷபதத்திற்கு இவ்விரண்டு பொருள்களையுங் கொண்டு 'பத்மதளம் போன்று விசாலமான கண்ணழகுடையவர், பத்மபத்ரம் போன்ற [தாமரையிலை போல் பசுமையுள்ள) திருமேனியையுடையவரென்றதாகக் கொள்ளக்கடவது. நம்மாழ்வார் திருவாய்மொழியில் * செக்கமலத்தலர்போலுங் கண்கைகால் செங்கனிவாய், அக்கமலத்திலை போலுந் திருமேனி* என்றருளிச் செய்தது மேலே விவரித்த பொருளைத் திருவுள்ளம் பற்றியே.

6 ராம: என்ற திருநாமத்தின் விவரணம்

'ரமதே' இதி ராம : ரமு-க்ரீடாயாம் என்று தாதுவாகையாலே விளையாடுபவன் என்று பொருள்படும். "த்வம் ந்யஞ்சத்பிருதஞ்சத்பி : கர்மஸூத்ரோபபாதிதை : ஹரே ! விஹரஸி க்ரீடாகந்துகைரிவ ஜந்துபி :" என்று நாரத முனிவர் கூறினபடியே, சிறுவர்கள் பந்துகளைக் கொண்டு விளையாடுமாபோலே எம்பெருமான் பிராணிகளை ; வைத்துக்கொண்டு விளையாடுகிருன். பந்தானது வெளுப்பு நூல்

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

கறுப்பு நூல் சிவப்பு நூலாகிய மூன்று நிற நூல்களாலே கட்டப்பட்டிருப்பது போல பிராணிகளும் ஸத்வரஜஸ்தமஸ்ஸுக்களாகிற மூன்று நிறமுள்ள குணங்களமைந்திருப்பர்கள். பந்தானது விஹாரகாலத்தில் மேலே போவதும் கீழே விழுவதுமாயிருப்பதுபோல, பிராணிகளும் "தே தம் புக்த்வா ஸ்வர்க்க லோகம் விசாலம் க்ஷீணே புண்யே மர்த்யலோகம் விசந்தி" என்கிறபடியே மேலே போவதும் கீழே விழுவதுமாயிருப்பர்கள். இங்ஙனே விளையாடும் பரமபுருஷன் இராமனாகத் திருவவதரித்து "ராமஸ் து ஸீதயா ஸார்த்தம் விஜஹார பஹூந்ருதூந்" என்று வான்மீகி பேசும் பிராட்டி யொருத்தியோடு விளையாடினான். "ராமஸ் ஸ ஸீதயா ஸார்த்தம்" என்னாதே (ராமஸ்து) என்றது ஸாபிப்ராயம். (து) என்னு மவ்யயம் வ்யாவ்ருத்தியைச் சொல்லும். இதுவரையில் பெருமாள் பித்ரு சுச்ரூஷையிலும் தர்மப்ரவர்த்தனத்திலும் தேவதா ஸமாராதனத்திலும் புகழ்படைத்திருந்தவர் இப்போது பிராட்டியோடே சேர்ந்தவாறே வேறுபட்டார். ச்ருங்கார கேளிகளிலே பரம ரஸிகரென்று புகழ்பெற்றபடியைச் சொல்லுகிறது ... ...

அன்றியே, ராம:—ரமதே என்பதற்கு உள்ளம் குளிரப் பெறுபவரென்பதும் பொருளாகையாலே அப்பொருளைக் கொண்டு அநுபவிப்பதும் பாங்கு. அன்பர்களோடு கலக்கப் பெற்றும் அன்பர்களின் காரியத்தைத் தலைக்கட்டியும் உள்ளம் குளிருபவர் பெருமாள். [குஹேந ஸஹிதோ ராம:] ராமன் குஹனோடு சேர்ந்தானென்று இதற்குப் பொருளன்று; குஹேந ஸஹிதஸ் ஸந் ராம:—குஹனோடு சேர்ந்த பின்பு ராமனானானென்றே ஆசாரியர்களருளிச் செய்வது. குஹனோடு சேர்ந்து உள்ளங் குளிர்ந்தா னென்கை. மற்றோரிடமுங் காணலாம்; [க்ருத்க்ருத்யஸ் ததா ராம:]* *அபிஷிச்ய ச லங்காயாம் ராக்ஷஸேந்த்ரம் விபீஷணம், க்ருதக்ருத்யஸ் ததா ராம:* விபீஷணனும் வானுக்கு முடிசூட்டித் தன் காரியம் தலைக்கட்டிற்றாக நினைத்து [ததா ராம: அப்போது தான் ரதியை யடைந்து ராமனாயின னென்கை. பெருமாள் செய்தருளின ஒவ்வொரு காரியமும் அவர் தம்முடைய திருவுள்ளத்தைக் குளிரச் செய்ய வல்லதே யாயிற்று. குஹஸுக்ரீவ மாருதி விபீஷணாதிகள் பக்கலிலே காட்டின அநுக்ரஹ விசேஷத்தினால் திருவுள்ளம் குளிர்ந்தது போல, தாடகாதாடகேயவிராத கரதூஷண ராவணாதிகள் பக்கலிலே காட்டின நிக்ரஹத்தினாலும் ஆச்ரித விரோதிகள் தொலையப் பெற்றோமென்று திருவுள்ளம் குளிர்ந்திருக்கக் குறையில்லை. ஆக, 'ரமதே இதி ராம:' என்கிற வ்யுத்பத்தியினால் ஸ்ரீராமாயணத்தில் பல ப்ரகரணங்கள் ஸங்க்ருஹீதங்களாகும். ... ...

அன்றியே ராம:—'ரமயதீதி ராம': என்கிற வ்யுத்பத்தியும் பொருந்தும். தன்னைக் காண்பவர்களையும் தன் சரிதை கேட்பவர்களையும் மகிழ்விப்பவர் பெருமாள் உலகத்தில் அதிகாரிகள் வெவ்வேறு பட்டிருப்பர்களாதலால் ஒரே குணத்தினால் எல்லாரையும் ஏக ரூபமாக மகிழ்விக்க முடியாது. "ஸத்யேந லோகாந் ஜயதி தீநாந் தாநேந ராகவ:. குரூந் சுச்ருஷயா வீர: தநுஷா யுதி சாத்ரவாந்." என்றுப்போலே ஒவ்வொருவர் பக்கலிலே ஒவ்வொரு குணத்தைச் செலுத்தி மகிழ்விப்பது ஸ்ரீ ராமாயண ப்ரஸித்தம். ஸௌசீல்யம் ஸௌலப்யம் ஸௌந்தர்யம் பொறுமை தயவு வாத்ஸல்யம் வீரம் என்றிவை முதலான பல திருக்குணங்கட்குக் கடலாயிருக்கின்ற பெருமாள் திருநாட்டிலே விலை செல்லகில்லாத திருக்குணங்களை விலை செல்

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

லச் செய்வதற்காகவே இம்மண்ணுலகில் வந்து அவதரித்தபடியினால் அத்திருக் குணங்களிலே அவரவர்களை யீடுபடுத்தி மகிழ்விக்கச் சொல்லவேணுமோ? குஹப் பெருமாளை ஸௌசீல்யத்தாலே மகிழ்வித்தான் ஸௌசீல்ய மென்பதும் சீல மென்பதும் பர்யாயம். தன் மேன்மை பாராதே தண்ணியரோடும் கலந்து பரி மாறுகை சீல குணத்தின் காரியம். இக்குணத்தினால் காரியங் கொண்டதுதான் ஸ்ரீ ராமாயணத்தில் அதிகம். ஸௌந்தர்ய ஸௌகுமார்யங்களாலே தண்டகாரண்ய வாஸிகளான மஹர்ஷிகளை யீடுபடுத்தினது பெரியதன்று, காதும் மூக்குமறுப்புண்டு கதறி யழுதுகொண்டே கரதூஷணாதிகளிடம் செல்லலுற்ற சூர்ப்பணகை "தருணௌ ரூபஸம்பந்நௌ ஸுகுமாரௌ புண்டரீக விசாலாக்ஷௌ சீரக்ருஷ்ணாஜிநாம்பரௌ, கந்தர்வராஜ ப்ரதிமௌ பார்த்திவ வ்யஞ்ஜநாந்விதௌ" என்று சொல்லிச் சொல்லிப் புலம்பும்படி செய்ததே சிறப்பு. இங்ஙனே ஓரோ குணங்களைக் காட்டி ஒவ்வொருவரையும் ரமிப்பித்தது பன்னியுரைக்குங்கால் பாரதமாம். .... *

7. (விராம:) என்ற திருநாமத்தின் விவரணம்

ரமயதீதிராம:' என்கிறுப்போலே 'விரமயதீதி விராம:' என்றுகும். விராமமாவது ஓய்வு: (1) பிறருடைய சௌர்யவீர்ய பராக்ரமங்களை ஓயச்செய்பவர். (2) பிறருடைய வாதத்தை ஓயச் செய்பவர் என்று இருபொருள் கொள்ளலாம். முந்தின பொருளைப்பற்றி விசேஷமாக விவரணம் காட்ட வேண்டியதுண்டோ? *ப்ரஹ்மா ஸ்வயம்பூச் சதுராநநோ வா ருத்ரஸ் த்ரிநேத்ரஸ் த்ரிபுராந்தகோ வா, இந்த்ரோ மஹேந்த்ரஸ் ஸுரநாயகோ வா த்ராதும் ந சக்தா யுதி ராமவத்யம்* என்ற திருவடியின் வார்த்தை யொன்றே போதும். பிறருடைய வாதத்தை ஓயச் செய்பவர்—என்ற இரண்டாவது பொருளுக்குச் சேரச் சிலவிடங்களை யெடுத்துக்காட்டுதும். ஆரண்ய காண்டம் ஆறுவது ஸர்க்கத்தில், தண்டகாரண்யவாஸிகளான முனிவர்கள் அரக்கர்களினால் தங்களுக்கு நேரிட்ட கஷ்டங்களை இராமபிரானிடம் விஜ்ஞாபித்துச் சரணமடைந்தபோது இராமன் அம்முனிவர்களுக்கு அபயமளித்த வரலாறு வருணிக்கப்பட்டது. பிறகு. ஒன்பதாவது ஸர்க்கத்தில் ஸீதா பிராட்டி இராமபிரானை நோக்கித் தர்க்கித்துப்பேசினாள். (அதாவது) நீர் முனிவேடம் பூண்டு காட்டுக்கு வந்திருக்கிறீர்; புண்ணிய புனல்களாடிச் சுகமாக அயோத்திசென்று சேரவேண்டியது ப்ராப்தம்' அப்படியிருக்க நீர் முனிவர் முன்னிலையில் பரஹிம்ஸை செய்வதாகப் பிரதிஜ்ஞை செய்தது எனக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. க்ஷத்ரியர்களுக்கு இது தருமமானாலும் இப்போது நீர் க்ஷத்ரிய தருமத்தைக் காக்கவேண்டிய நிலைமையில் இல்லாதபடியாலும். "தாழிருஞ்சடைகள் தாங்கித் தாங்கருந் தவம் மேற்கொண்டு" காட்டுக்கு வந்திருப்பதாலும் ஆயுதங்களைக்கொண்டு செய்யுஞ்செயலை நீர் நெஞ்சாலும் நினைக்கவே தகாது. உமக்குத் தெரியாததொன்றுமில்லை; உமக்கு நான் தருமம் உபதேசிக்கவந்ததாக நினைக்க வேண்டா; திருத்தம்பியாரோடும் ஆலோசித்து யுக்தமானபடி செய்யக்கடவீர்—என்றுரைத்தாள். இதைக் கேட்டஇராமன் (பத்தாவது ஸர்க்கத்தில்) அந்த ஸீதா பிராட்டியின் வாதத்தை ஓயச் செய்திருப்பதைக் காணவேணும். அதில் ஸாரமான விஷயம் இவ்வளவே. 'அப்யஹம் ஜீவிதம் ஜஹ்யாம் த்வாம் வா ஸீதே! ஸலக்ஷ்மணாம், ந ஹி ப்ரதிஜ்

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஞாம் ஸப்ச்ருத்ய ப்ராஹ்மணேப்யோ விசேஷத :* இத்யாதிகளைச் சொல்லி அவளுடைய வாதத்தை விராமமடையச் செய்தனனென்பது. வாலி "அரக்கரோரழிவு செய்து கழிவரேல் அதற்கு வேறோர் குரக்கினத்தரசைக் கொல்ல மனுநெறி கூறிற்றுண்டோ?" என்றுப்போலே சில வாதங்களைச் செய்தபோது பெருமாள் அவன் வாயினாலேயே க்ஷமைவேண்டும்படி செய்து அவனை விராமமடையச் செய்ததும் இங்ஙனே பலவுங் காண்க. ... ... *

8. விரத: என்கிற திருநாமத்தின் விவரணம்

தம்முடைய ஸமீசீன வாதங்களாலே பிறருடைய வர்தங்களை விராமமடையச் செய்யுமாற்றல் விராம ; என்ற கீழ்த்திருநாமத்தில் அநுபவிக்கப்பட்டது. பிறருடைய ஸமீசீன வாதங்களாலே தாம் விராமமடைவதும் விதண்டாவாத வைதேசிகரான பெருமாள் பக்கலிலே காண்பதுண்டு. தாம் பிடித்ததே பிடிவாதமாக இராமல் "யுக்தியுக்தம் வசோ க்ராஹ்யம்" என்று கொண்டு தம்முடைய வர்தத்திற்கு விச்ராந்திகொள்பவர் பெருமாள். அல்லது, காரண விசேஷந்தாலே தாம் நிக்ரஹிக்கப் புகுந்தாலும், உடனே நன்மைகண்டு நிக்ரஹத்தில் நின்றும் விரதராகி அநுக்ரஹோந்முகராமவர் என்பதையுங் கொள்ளலாம். இவ்விரண்டையும் அடைவே விவரிக்கிறேன். அயோத்யா காண்டம் இருபத்தாறும் ஸர்க்கத்தில் இராமபிரான் தாய் தந்தையர் சொற்படி காட்டுக்குச் செல்ல நேர்ந்ததை ஸீதா பிராட்டியிடங்கூறி அவளை நகரத்திலேயே வாழுமாறு திட்டம் செய்ய, (ஸர். 27) அதற்கு பிராட்டி தன்னையும் உடனழைத்துச் செல்லுமாறு நிர்ப்பந்திக்க, (ஸர். 28) அவளுக்கு இராமன் காட்டின் கொடுமைகளைக்கூறி 'நீ காட்டுக்கு வரவே தகாது ; என்று வலிதாகத் தர்க்கித்தான். அதற்குமேல் பிராட்டி (29, 30 ஸர்க்கங்களில்; பிரணயரோஷம் தலையெடுத்து "ராமா! உன்னிடத்தில் அழகு மட்டுமேயுள்ளது) அதைக்கண்டு அனைவரும் மயங்கிவிடுகிறார்கள் ; உனக்கு ஆண்மையென்பது சிறிதுமில்லை ; என்னொருத்தியைக் காக்க முடியாமல் என்னை நிறுத்தி நீ காட்டுக்குப் போனாயென்று என் தந்தையார் கேள்விப்பட்டாராகில் 'ஹா! புருஷவேஷம் பூண்டு வந்தவொரு பெண்பிள்ளைக்கா என் மகளைக் கொடுத்தேன்!' என்று மிகவும் மனம் நொந்துகொள்வர் ; என்னைக் காட்டிலே காக்கமாட்டாத காபுருஷனா நீ?' என்று இனைய பலவும் சொல்லித் தர்க்கிக்க, இராமன் தன்னுடைய பிடிவாதத்தில் நின்றும் விரதனாகி அவளையும் உடனழைத்துச் செல்ல இசைந்தனன்.

காரண விசேஷத்தாலே நிக்ரஹிக்கப்புகுந்து நிக்ரஹத்தில் நின்றும் ஓய்ந்த படியையும் இரண்டிடங்கொண்டு காட்டுவோம். கிஷ்கிந்தா காண்டத்தில் (ஸர். 30) ஸுக்ரீவ மஹாராஜர் வர்ஷாகாலத்திலே பெருமாள் ஓய்வு கொடுத்ததை வியாஜமாகக் கொண்டு விஷயபோகங்களிலே ஊன்றிக்கிடக்க, காலம் கடந்தும் படைகளைத் திரட்டுக்கொண்டு வாராமையைக்கண்ட பெருமாள் சீறிச் சிவந்து நிக்ரஹிக்கத் திருவுள்ளம்பற்றினபடியை இளையபெருமாள் முகமாகத் தெரிவிக்கவெண்ணி "ந ச ஸங்குசித: பந்தா யேந வாலீ ஹதோ கத:" "மா வாலிபதமந்வகா:" "ஹஷ்யாமி ஸபாந்தவம்" இத்யாதிகளைச் சொல்லி அச்சமுறுத்தினார். ஸுக்ரீவன் குடும்பத்தோடு மாண்டுவிட்டானின்று என்றே நினைக்கும்படியாயிருந்தது. இந்த ப்ரபலமான நிக்ரஹ ஸங்கல்பம் என்னாயிற்று? "ராமஸுக்ரீவயோரைக்யம் தேவ்யேவம்

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸமஜாயத" என்று பிராட்டி பக்கலிலே திருவடி சொல்லும்படியாகவன்றோ அயிற்று
"வாநராணும் நராணுஞ்ச கதமாஸீத் ஸமாகம:?" என்று பிராட்டி திருவடி
யைக் கேட்டாள். பணைத்தித்திரிகிற குரங்கினங்களுக்கும் புருஷோத்தமர்களுக்கும்
சேர்க்கையுண்டானபடி எங்ஙனேயென்று கேட்டாள். அதற்குத் திருவடி சொன்
னது, 'வெறும் ஸமாகமமன்று; ராமனும் ஸுக்ரீவனும் ஏகதத்வமென்னும்படி
யாகவன்றோ குழைந்தார்களென்று. ஆக, நிக்ரஹத்தில் நின்றும் ஒய்ந்தபடியாலே
வீரதனென்றது ஒக்கும். மற்றோரிடம் யுத்த காண்டத்தில் ஸமுத்திர சரணாகதி ப்ர
கரணமாகும். "பாஹும் புஜக போகாபமுபதாயாரி ஸூதந:' அஞ்ஜலிம் ப்ராங்
முக: க்ருத்வா ப்ரதிசிச்யே மஹோதததே:" என்னும்படி கடலரசனை வழிவேண்டி
மூன்றுநாள் தரைக்கிடை கிடந்தார் பெருமாள். அவனோ முகங்காட்டிற்றிலன்:
*சாபமாநய ஸௌமித்ரே சராம்ச்ச ஆசீவிஷோபமாந், ஸாகரம் சோஷயிஷ்யாமி
பத்ப்யாம் யாந்து ப்லவங்கமா:* என்று பலவுஞ்சொல்லி உலகில் ஜலதத்வமே
யில்லாதபடி செய்துவிடுகிறேனென்று சீற்றத்தினெல்லையில் நின்றார் பெருமாள்.
பிறகு என்னாயிற்று? அக்கடலரசன் சிறிது ஆபிமுக்ய்யம் காட்டினவாறே 'ஸமுத்ர
ராஜனே! இவ்வம்பு உனக்காகத் தொடுத்ததன்று; உன் பகைவர்மேலே விடத்
தொடுத்ததத்தனை; உன் பகைவர்களைக் காட்டிக் கொடு' என்று கூறி அவன்
காட்டிக்கொடுத்த த்ருமகுல்யமென்கிற விடத்திலே அம்பைச் செலுத்தி அநுக்ரஹ
சீலராகி நிக்ரஹத்தில் நின்றும் விரதரராயினர். (யுத்தகாண்டம் ஸர்க்கம் 22
காண்க.)......மேலே ராவணனோடு துமுலமான யுத்தம் நடக்கும்பொழுது அவன்
சசால சாபஞ்ச முமோச வீர; என்னும்படி கைமாண்டு நின்றவாறே "கச்ச
அநுஜாநாமி" என்று சொல்லி விடை கொடுத்துப் போகவிட்டு அப்போது யுத்தத்தில்
நின்றும் விரதரானார்பெருமாள்—என்பதும் இங்கு (விரத:) என்னும் திருநாமத்தின்
பொருளாகக் கொள்ளத்தகும். இனி அடுத்த திருநாமத்திற்குச் செல்வோம்.

9. மார்க்க: என்ற திருநாமத்தின் விவரணம்

'மார்க்யதே' இதி மார்க்க; மார்க்கணமாவது தேடுதல். தேடப்படுகிறவர்
என்றபடி. தேடுகிறவர் என்கிற பொருளும் பொருந்தும். தேடப்படுகிறவர்
என்னும் பொருளை முன்னம் விவரிப்போம். வேதாந்தங்களிலே "ஸோऽந்வேஷ்டவ்ய:"
என்று ஓதியுள்ளது. பகவான் தேடத் தகுந்தவன் என்றபடி. இந்தச் சுருதியை
யடியொற்றியே திருமங்கையாழ்வார் "நான்மறைகள் தேடியோடுஞ் செல்வன்"
என்றும், "நான்மறைகள் தேடியென்றுங் காணமாட்டாச் செல்வன்" என்று
மருளிச்செய்தார். உத்தர ஸ்ரீராமாயணத்திலே 'சம்பூகவதம்' என்றொரு கெட்டம்.
தவம்புரியத் தகாத ஜாதியிலே பிறந்தானொருவன் தண்டகாரணியத்திலே
கொடுந்தவம் புரிய, அதனாலே அயோத்தியில் ஒரு அந்தணனுடைய குழந்தை
இறந்துபோக, அந்த சூத்ரதபஸ்வியைக் கொன்றாலன்றி இந்த பிராமண சிசு
உயிர்பெறுதென்றறிந்த பெருமாள் அவனை வதைக்கத் திருவுள்ளம்பற்றிக்
கையுங்கத்தியுமாகத் தண்டகாரணியத்திற்கெழுந்தருளுகிறார். [பெருமாள் திரு
மொழியில் *செறிதவச் சம்புகன் தன்னைச் சென்று கொன்று செழுமறையோ
னுயிர்மீட்டு* என்றநுஸந்திக்கப்பட்ட கதை இது.] காடேறச் செல்லாநின்ற
பெருமாள் "சம்புகனென்கிற சூத்திரன் தவம் புரிகிறானமே; எங்கே எங்கே?"

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

என்று கேட்டுக்கொண்டே அவனைத் தேடிக்கொண்டு செல்லுகின்றார்; சென்று அவனையணுகினபோது அவன் சொல்லுகிறான் *அந்வேஷ்டவ்யோ யதஸி புவைநர் லோக நாதச் ச:ண்ய: மாம் அந்விஷ்யந்..." [உத்தரராமசரிதே பவபூதி:] என்றான். உலகர்களாலே தேடத்தக்கவனாக வேதங்களில் சொல்லப்படுகிற மஹாப்ரபுவே, நீ என்னைத் தேடிக்கொண்டு வந்தனையே, நான் எவ்வளவு பாக்யசாலி! என்றான். இங்கு கர்த்தரியர்த்தம் கர்மணியர்த்தம் ஆகிய இரண்டு பொருளும் காணலாம். மாரீச மாயாம்ருகத்தை வதைத்து மீண்டபின் பர்ணசாலையில் பிராட்டியைக் காணாமல் அவளைத் தேடிக்கொண்டு திரிந்தது, தனுகபந்தனுடைய சொல்லின்படி சபரியையும் ஸுக்ரீவனையும் தேடிப்போந்தது என்னுமிவற்றையும் கொள்ளலாம். மார்க்க: என்பதற்கு வழியாயிருப்பவன், வழிகாட்டுபவன் என்கிற பொருள்களுங்கொள்ளலாம். வழியென்றாலும் நெறியென்றாலும் பரியாயம். நம்மாழ்வார் பெரிய திருவந்தாதியில் *நெறிகாட்டி நீக்குதியோ* என்கிற பாசுரத்தில் உபாயமென்னும் பொருளில் நெறியென்னுஞ் சொல்லைப் பிரயோகித்திருப்பதனால் மார்க்க; என்னும் வடசொல்லும் உபாயவாசகமாகக் குறையில்லை. முகுந்தமாலையில் "கரசரண ஸரோஜே காந்திமந் நேத்ரமீநே ச்ரமமுஷி புஜவீசிவ்யாகுலே அகாதமார்க்கே, ஹரிஸரஸி விகாஹ்ய" என்ற சுலோகத்தில் 'அகாதமார்க்கே' என்றவிடத்தில் மார்க்க சப்தம் உபயார்த்தகமாகவே பிரயோகிக்கப்பட்டுள்ளது. "உபாயோபேயத்வே ததிஹ தவ தத்வம் ந து குணௌ" என்று ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் பட்டர் அருளிச்செய்தபடி எம்பெருமானுக்கு உபாயத்வம் ஸ்வரூபமாகையாலே உபேயபூதனான தானே உபாயமுமாயிருக்கும்படியைச் சொல்லிற்றாகிறது. ராவண வதமான பிறகு பிரமன்வந்து செய்யும் துதியில் "சரண்யம் சரணஞ்ச த்வாம் ஆஹுர் திவ்யா மஹர்ஷய:" என்றதனால் மூதலிக்கப்பட்ட அர்த்தமேயன்றோ இது. இனி, வழிகாட்டுகிறவன் என்னும் பொருளுக்கு ஸமந்வயம் பெரியவுடையார் (ஜடாயு) பக்கலிலே காணலாம். *மயா த்வம் ஸமநுஜ்ஞாத: கச்ச லோகாந் அநுத்தமாந்* என்று சொல்லிச் சடாயுவுக்கு வைகுந்தத்தேற வழிகாட்டினவரன்றோ பெருமாள். *யா கதிர் யஜ்ஞ சீலாநாம்* இத்யாதியாகச் சொன்ன ராம வாக்யத்தில் (கதி:) என்பதற்கு மார்க்கமென்பதுதானே பொருள். பகவத் கீதையில் (8-26) *சுக்ல க்ருஷ்ணே கதீ ஹ்யேதே* என்றவிடத்தில் கதிசப்தார்த்தம் மார்க்கமேயன்றோ. இனி அடுத்த திருநாமத்திற்குச் செல்வோம்.

10. நேய: என்ற திருநாமத்தின் விவரணம்

நாயகனென்னும் பொருளதான நேதாவென்னுஞ் சொல்லுக்கு எதிரான சொல் (நேய:) என்பது கட்டளையிடுபவனை நேதா என்போம்; கட்டளையிடப் பெறுபவனை (நேய:) என்போம். "யஸ்ய விச்வ உபாஸதே ப்ரசிஷம் யஸ்ய தேவா:" என்று வேதமோதியுள்ளபடியும், *ஆணை மெய்பெற நடாய தெய்வம் மூவரில் முதல்வனாகி* (திருவாசிரியம்) என்று ஆழ்வாரருளிச்செய்தபடியும்* மனிசர்க்குத் தேவர்போலத் தேவர்க்கும் தேவனாகிய தான் ஸகலதேவர்களையும் கட்டளையிட்டுப் பணிகொள்ளத் தக்கவனாயிருந்துவைத்தும் பிறர் தன்னைக் கட்டளையிடும்படியாக வாயிற்று ஸ்ரீராமாவதாரம் செய்தருளிற்று. விச்வாமித்ரமுனிவன் தான் ஒரு வேள்வி செய்வதாகத் தொடங்கி அதனை இடையூறின்றி நிறைவேற்றுதற்

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

பொருட்டுத் தசரதமன்னவனிடம் வந்து இராமனைத் தருகவென்று இரந்தனன். அதற்கு மன்னவன் உடன்படவில்லை. அரக்கர்களோடு போர்புரியத்தக்க பருவ மின்றிக்கே மிக இளையவனான என் சிறுவனை நான் உம்மோடுகூட அனுப்பமாட்டே னென்றனன். அதற்கு முனிவன் மன்னவனை நோக்கி இவனது பெருமையை நீ அறிந்திலை; அறப்பெரியோனான இவனை மிகச் சிறியவனாக நீ நினைத்திருக்கிறு யத்தனை; *வேதாஹமேதம் புருஷம் மஹாந்தம்* என்று வேதம் பேசின பெருமை வாய்ந்த மஹாபுருஷனன்றோ இவன்; இவனை உள்ளபடியே யானறிவேன்; நான் மட்டுமல்ல; இதோ உன்னெதிரில் வீற்றிருக்கின்ற நற்றவமாமுனிவர்களும் நன்கறிவர்கள் என்று இனையபலவுஞ்சொல்லி ஸ்ரீராமலக்ஷ்மணர்களைக் கொண்டுசென்றான். தந்தை யாரிடம் இங்ஙனே முனிவன் பேசின பேச்சுக்களையெல்லாம் ஏகாந்தமாகக் கேட்டுக் கொண்டிருந்த இராமபிரான் 'சேஷபூதனாய்ப் பரதந்திரனாய்ப் பிறக்கவேணு மென்று ஆசைப்பட்டு வந்து பிறந்த நம்மைப் பரமாத்மாவென்று வெளியிட்டு விட்டாரே! இது நமது நினைவுக்குத் தகுதியன்றே; மேலும் இந்த விச்வாமித்திரர் இதுவரையில் எத்தனையோ அரியபெரிய வேள்விகளையும் தவங்களையும் இயற்றி யிருக்கிறார்; அப்போது ஒருவரையும் துணைவேண்டினவரல்லரிவர்; இப்போது இவர் மிகச் சிறிதாகச் செய்ய நினைத்திருக்கிற ஆறு நாளைய வேள்விக்குத் துணை வேண்டிவந்தது வெறுமனல்ல; நம் தந்தையார் சதுரங்க பலத்தோடு தாம் வந்து அவலீலையாக வேள்வியைக் காத்துத் தருவதாகச் சொல்லவும் அதையும் மறுத்து நம்மையே வேண்டிக் கொணர்ந்தவிம்முனிவர்க்கு ஏதோ விசேஷமான தொரு கருத்து இருக்கவேண்டும். நம்மை ஏவிக் காரியங்கொள்ள நினைந்தே (அதாவது நாம் ஆசைப்பட்ட சேஷத்வத்தை உலகமறியச் செய்யக் கருதியே) நம்மை வேண்டிக் கொணர்ந்தார்போலும்' என்று மருமமறிந்துகொண்டு இராமன் அம் முனிவரிடம் கைகூப்பி ஒன்று விண்ணப்பஞ்செய்தான்;—இமௌ ஸ்ம முநிசார்தூல! கிங்கரௌ ஸமுபஸ்திதௌ, ஆஜ்ஞாபய யதேஷ்டம் வை சாஸநம் கரவாவ கிம்'' என்றான். இதன் பொருளாவது, முநிஸார்வபௌமரே! நானும் என் தம்பியான லக்ஷ்மணனும் உம்முடைய கட்டளைப்படி நடந்துகொள்ள வந்தவர்கள்; எப்போதும் உமது அருகிலேயேயிருந்து நீர் நியமிக்கும் குற்றேவல்களைச் செய்ய நாங்களிருவரும் காத்திருக்கிறோம்; நீர் கூசாமல் எங்களுக்கு எவ்விதமான கட்டளையுமிடலாம்; உமக்கு என்ன பணிவிடை செய்யப் பெறுவோமென்று எதிர்ப்பார்த்திருக்கிறோ மென்பதாம். ஆக, ஆஜ்ஞாபகனான தான் ஆஞ்ஞாப்யனாகைக்கு ஆசைப்பட்டது தான் (நேய:) என்பதனால் தெரிவிக்கப்பட்டதாகிறது. இனி அடுத்த திருநாமத் திற்குச் செல்வோம். ... ... *

11. நய: என்ற திருநாமத்தின் விவரணம்

அந்யாந் ஸர்வாந் ஸ்வயம் நயதீதி நய; பிறருடைய கட்டளையைத்தான் எதிர்பார்த்து அப்படியே நடந்துகொள்வதாகக் கீழ்த்திருநாமம் காட்டிக் கொடுத்தது. *பதிம் விச்வஸ்யாத்மேச்வரம்* என்று ஓதப்படுகிற பகவானுக்கு அந்த நேயத்வம் [ஆஜ்ஞாப்யத்வம்] ஸ்வேச்சையினாலாயது; நிருபாதிகமாகவுள்ள தன்மையைச் சொல்லுமிடத்து ஸர்வநிர்வாஹகத்வமேயன்றோ அஸாதாரணமாகச் சொல்லு கிறது. இராமபிரான் தன்னைப்பற்றித் தன்வாக்காலே சொல்லிக்கொள்ளும்போது

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஆத்மாநம் மாநுஷம் மந்யே ராமம் தசரதாத்மஜம் இத்யாதியாக எங்ஙனே சொல்லிக்கொண்டாலும், பிறர் சொல்லும்போது அவனுடைய பெருமையைப் பரக்கச் சொல்லியிருக்கவில்லையா? *சரண்யம் சரணஞ்ச த்வாம் ஆஹுர் திவ்ய மஹர்ஷய: ஜகத் ஸர்வம் சரீரம் தே......* இத்யாதியாகவன்றோ பிரமன் சொல்லிவைத்தது. ஆகவே (நேய:) என்கிற கீழ்த்திருநாமத்திற்கு எதிர்த்தட்டான (நேதா) என்னுந்திருநாமத்தின் அர்த்தமே (நய:) என்பதிலுள்ளதென்று கொள்ள லாம். அன்றிக்கே, நயதீதி நய :—கொண்டுபோகிறவன் என்றபடி. இராமபிரான் தன்னடிச் சோதிக்கு எழுந்தருளும்போது தான் ஒருவனாக எழுந்தருளவில்லையே; *அன்று சராசரங்களை வைகுந்தத்தேற்றி* என்று ஸ்ரீகுலசேகரப் பெருமாளருளிச் செய்தபடியே சராசரங்களையுமன்றோ உடன் கொண்டு சென்றது (இதனைச் சிறிது விவரிப்போம்;) *முனிவன் வேண்டத் திறல்விளங்கு மிலக்குமனைப் பிரிந்தான் தன்னை* என்று குலசேகரர் பணித்தபடியே இளையபெருமாளைவிட்டுப் பிரிந்ததனால் தரிக்கமாட்டாமல் மிகவும் கிலேசமடைந்த இராமபிரான் ராஜ்யத்தைவிட்டு எழுந்தருளத் தொடங்கியபோது அயோத்யா நகரத்து உயிர்களெல்லாம் பெருமாளைச் சரணமடைந்து 'தேவரீர் எங்குச் சென்றாலும் அடியோங்களையும் கூடவே அழைத்துக்கொண்டு செல்லவேண்டும்' என்று பிரார்த்திக்க. ஸ்ரீராமன் அவர்களது பத்திப்பெருங்காதலைக் கண்டு 'அப்படியே யாகட்டும்' என்றருளிச் செய்து அனைவரையும் தன்னைப் பின்தொடர்ந்து வருமாறு பணிந்தருளிப் பயணப் பட்ட ளவிலே. அந்நகரத்திலிருந்த மனிதர்களேயன்றி விலங்கு பறவை முதலிய அஃறிணையுயிர்களும் அகமகிழ்ந்து பெருமாளைப் பின் செல்ல, இங்ஙனம் பலரும் புடைசூழ பகவான் ஸரயூநதியில் இறங்கித் தன்னடிச் சோதிக்கெழுந்தருளும்போது தம்மிடத்து இடையறாத அன்புகொண்டு பின்பற்றிச் சரயுவில் மூழ்கி உடம்பைத் துறந்த எல்லாவுயிர்கட்கும் பிரமலோகத்திற்கு மேற்பட்டதாய்ப் பரமபதம் போலவே மீட்சியில்லாததான ஸாந்தாநிக மென்னும் உலகத்தையளித்தனரென்பது இதிஹாஸம். இங்ஙனே நயனம் பண்ணினபடியைக் காட்டும் (நய:) என்கிற திருநாமம். வராஹ சரமச்லோகத்தில் "அஹம் ஸ்மராமி மத்பக்தம் நயாமி பரமாம் கதிம்" என்று சொன்னவரேயன்றோ. ... ... *

12. அநய: என்ற திருநாமத்தின் விவரணம்

இதற்கு பாஷ்யத்தில் பட்டர் அருளிச்செய்திருக்கும் ரஸவத்தரமான பொருளை முன்னம் விவரிக்கிறேன். "அய: சுபாவஹோ விதி:; ஸ அஸ்மாத் அந்யோ ஜநாநாம் நாஸ்தி இதி அநய:" என்பது பகவத்குணதர்ப்பண ஸ்ரீஸூக்தி. அமரகோசத்தில் "அயச் சுபாவஹோ விதி:" என்னப்பட்டது; நன்மைபயக்கும் செயலுக்கு அய மென்று பெயர்; இராமனைக் காட்டிலும் நன்மை செய்வார் வேறுயாருமிலர் என்பது தாற்பரியமாகத் தேறும். ஸ்தோத்ரரத்னத்தில் *அநுத்தமம் பாத்ரமிதம் தயாயா:* என்றவிடத்தில் 'அநுத்தமம்' என்பதற்குப்போல இங்கு 'அநய:' என்பதற்கும் பஞ்சமீ பஹுவ்ரீஹிஸமாஸம் பொருத்தமுடையதேயாம். தீங்கிழைப்பவர்களுக்கும் நன்மை புரிவதையே தன்மையாகக் கொண்டவரன்றோ பெருமாள் *நஸ்மரத்யபகாராணாம் சதமப்யாத்மவத்தயா, கதஞ்சிதுபகாரேண க்ருதேநைகேந துஷ்யதி* என்றன்றோ அயோத்யாவாஸி ஜனங்கள் ராமகுணகீர்த்தநம் பண்ணிற்று.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

மேலெடுத்த சுலோகத்தில் [கதஞ்சிதுபகாரேண] என்றதன் பொருளை ஆழ்ந்து அறிய வேணும். பிறர் செய்வது உண்மையில் உபகாரமன்று; அவர்கள் செய்தது அபகார மாகவேயிருந்தாலும் கதஞ்சித் உபகாரமாக ஆக்கிக்கொள்ளப்படுகின்றதென்கை. இதனை ஸ்ரீவசனபூஷணத்தில் (4-1) "நன்மையென்று பேரிடலாவதொரு தீமையுங் காணாதே...தனக்கேற இடம் பெற்றவளவிலே 'என்னாரைச் சொன்னாய் என் பேரைச் சொன்னாய் என்னடியாரை நோக்கினாய் அவர்கள்விடாயைத் தீர்த்தாய் அவர்களுக்கொதுங்க நிழலைக் கொடுத்தாய்' என்றாப்போலே சிலவற்றையேறிட்டு மடிமாங்காயிட்டு..." இத்யாதி திவ்ய ஸூக்திகளாலறிக. இப்படியாக ஏறிட்டு அநுக் ரஹித்தது ராமாவதாரத்திலுண்டோவென்னில்; ஓரிடம் காட்டுவோம் ஆளவந் தார் ஸ்தோத்ரரத்னத்தில் வாயஸரக்ஷணத்தை யருளிச்செய்யுமிடத்து "தாத் ருசோ வாயஸஸ்ய ப்ரணத இதிதயாலு;"என்றருளிச்செய்தார். இங்கு"ப்ரணதஸ்ய வாயஸஸ்ய தயாலு:* என்னாதே [ப்ரணத இதி தயாலு;] என்றதன் உட்கருத்தையறிந்து ஸ்தோத்ர பாஷ்யத்தில் பணித்திருப்பது—"தயார்த்ரபுத்த்யா ப்ரணதத்வேந பரிக் ருஹ்ய இத்யர்த்த:' என்று. அதாவது, ப்ரணதியை யுத்தேசித்துக் காகம் வந்ததில்லை; எங்குந்திரிந்து செயல் மாண்டு புகலிடமற்று வந்துவிழுந்ததத்தனை. அந்த வீழ்ச்சி யையே ப்ரணதியாகக்கொண்டு பெருமாள் காத்தருளினர் என்கை. விபீஷண அபயப்ரதாந ப்ரகரணத்தில் "ந த்யஜேயம் கதஞ்சந" என்றது இங்கு சிகரமாக நினைக்கத்தக்கது.

அதவா, அநய: என்பதற்கு 'வித்யதே நய: யஸ்மிந் ஸ:' என்று கொண்டு நயமில்லாதவர் என்கிற பொருளுங்கொள்ளலாம். நயமாவது நீதி: இராமனை நீதி யற்றவரென்று சொல்லலாமோ? கோபிகள் கண்ணனை நோக்கி "நீரிலே நின் றயர்க்கின்றோம் நீதியல்லாதன செய்தாய்" என்கிறார்கள். அப்படி இராகவனை நோக்கி யாரும் சொன்னதில்லையே; வாலி போல்வார் சொல்வது பரமார்த்த மாகக் கொள்ளத் தகுமோ? என்று சங்கை தோன்றும். அநியாயமான செய்கை யைச் செய்பவரென்று பொருளன்று. நீதியாவது நியதி; இராமபிரானுடைய செயல் ஒரு நியதியிலே [வ்யவஸ்தையிலே] அடங்குமதன்று என்று தாற்பரியங் கொள்க. (இதன் விவரணம் கேண்மின்.) பரமபூஜ்யரான பரத்வாஜ மஹர்ஷியின் ஆச்ரமத்திலே அமுதுசெய்தாரென்று கேள்விப்படுமாபோலே சபரி கையாலே அமுது செய்தருளினாரென்றும் கேள்விப்படுகிறோம். விச்வாமித்ரமுனியை நாதராகக் கொண்டாரென்று கேள்விப்படுமாபோலே *ஸுக்ரீவம் நாதமிச்சதியென்றும் *ஸுக்ரீவம் சரணம் கத;* என்றும் கேள்விப்படுகிறோம். இப்படியாக ஒரு நியதி யில்லையாயிற்று ராமகாரியங்களில், ஸங்கல்பஸூர்யோதயத்தில் "பகவதி பரத் வாஜே புக்திஸ் ததா சபரீகரே" இத்யாதி பணித்திருப்பதைக்கொண்டு ரஸிக ஹ்ருதயங்கமமாக நிர்வஹிக்கும்படி இது.

13. வீர: என்ற திருநாமத்தின் விவரணம்

பகவானுடைய திருக்குணங்களில், வீர்யம், சௌர்யம், பராக்கிரமம் என மூன்று குணங்கள் சேர்த்து அநுஸந்திக்கப்படுவதுண்டு. இம்மூன்று சொற்களுக் கும் பொருளில் வாசியில்லைபோல் தோன்றினாலும் வாசியுண்டு. எதிரிகளின் சேனை எவ்வளவு பிரபலமாக இருந்தாலும் அதைக்கண்டு அஞ்சாமை (1), அந்தச் சேனை

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

யினுள்ளே ஒருவனுகவே புகுந்து எதிரிகளை அநாயாஸமாகக் கொன்று முடிக்கும் வல்லமை (2), அப்படிச் செய்யுமளவில் தனக்குச் சிறிதளவேனும் பங்கம் நேராத படி ஸகலவித பங்கங்களும் எதிரிகளுக்கே சாரநிற்றல் (3), என்றிங்ஙனே மூன்று வகையான ஆற்றல்கள் பெரும் போர்வீரர்களுக்கு இருக்கவேண்டியவை யுண்டு. இம்மூன்றையுஞ் சொல்லும் சொற்களாக வீர்ய சௌர்ய பராக்ரம சப்தங்களைக் கொள்ளலாம். இங்கு வீர: என்று விர்யமொன்று மாத்திரமே சொல்லப்பட்டிருந் தாலும் மற்றையிரண்டும் உபலக்ஷணமாகக் கொள்ளத்தக்கன அல்லது உள்ள சொல்லிலேயே (அதாவது வீர: என்ற சொல்லிலேயே) அம்மூன்று பொருள்களையும் சேர அநுஸந்தானம் செய்யவுமாம். ஸ்ரீராமாயணத்திலும், மற்றும் இராமபிரானைப்பற்றிப் பேசும் பல நூல்களிலும் இராமனை வீரனென்றும் சூரனென்றும் "பராக்ரமசாலியென்றும் பாராட்டிக்கூறுவது விசேஷமாகக் காணத்தக்கது. இராமனுக்கு மஹாவீரனென்றே ஒரு திருநாமமுண்டு. "ஜயஜய மஹாவீர!" என்றே ரகுவீரகத்யத்தின் தொடக்கம். வீரராகவனென்றே ஒரு திவ்யதேசத்தில் திருநாமம்பெற்று விளங்குகின்றமை ப்ரஸித்தம். பவபூதிமஹாகவி மஹாவீரசரிதமென்றே பெயரிட்டு நூலியற்றினன். ஆழ்வார்கள் இராமனது செயலைச் சொல்லி வீரனென்றே வாய் வெருவுவர்கள்; "இலங்கை மன்னனைந்தொடு டந்து பைந்தலை நிலத்துகக் கலங்க வன்று சென்று கொன்று வென்றிகொண்ட வீரனே! "மாறுசெய்த வாளரக்கன் நாளுலப்ப அன்றிலங்கை நீறு செய்து சென்றுகொன்று வென்றிகொண்ட வீரனே" என்றுமுள்ள [திருச்சந்த விருத்தம்] பாசுரங்கள் காண்க. இவை யெல்லாவற்றிலுங்காட்டிலும் எதிரி கையாலே விடுநீட்டென்னும் கணக்கிலே இராவணனே வியந்துபோற்றும் வீரியம் இராமனுக்குள்ளது. [வால்மீகி. யுத்த. 106 6] "சத்ரோ: ப்ரக்யாத வீர்யஸ்ய ரஞ்ஜநீயஸ்ய விக்ரமை:" என்பது இராவணனுடையமொழி. இராமனை ப்ரக்க்யாத வீர்யனென்று இராவணன் தன்வாயினுல் போர்க்களத்திற் சொல்லுவதானது அந்த வீர்யத்தைத் தான் மிக நன்ருக வநுபவித்ததனுலன்ரே! "விக்ரமை: ரஞ்ஜநீயஸ்ய" என்றும் அடுத்தபடியே சொல்லுகிருன். இங்ஙனே சொல்லும்படியாக இராமன் செய்த வீரச்செயல்கள் பலபல விருப்பினும் ஒன்றெடுத்துக் காட்டுவோமிங்கு. யுத்த காண்டத்தில் தொண்ணூற்று நான்காம் ஸர்க்கம் காண்க. அங்கு மூலபலம் திரண்டவன்று இராமனுடைய அதிமாநுஷப் போர்வல்லமையைப் பேச வான்மீகி முனிவரும் தடுமாறுகின்ருர். "சீர்ணம் பிந்நம் சரைர் தக்தம் ப்ரபக்நம் சஸ்த்ரபீடிதம். பலம் ராமேண தத்ருசுர் ந ராமம் சீக்ரகாரிணம்" என்று. இராமனுல் பலவாறு தகர்ப்புண்ட அரக்கரது சேனைகளைக் கண்டார்களொழிய பம்பரமாகச் சுழல்கின்ற இராமனை ஒருவரும் காணமாட்டிற்றிலர் என்கிருர். மேலே *தே து ராமஸஹஸ்ராணி ரணே பச்யந்தி ரக்ஷஸ:* என்று ஆயிரக்கணக்கான ஸ்ரீராமமூர்த்திகளைக் கண்டார்களென்கிருர். உடனே *புந: பச்யந்தி காகுத்ஸ்தம் ஏகமேவ மஹாஹவே* என்று. அந்தப் போர்க்களத்தில் இராமனொருவனையே கண்டார்களென்கிருர். இராமனைக் காணவேயில்லையென்பது, ஆயிரக்கணக்கான ராமர்களைக் கண்டார்களென்பது, ஒரு ராமனையே கண்டார்களென்பது—ஆகவிப்படி ஒன்ருேடொன்று சேராதவண்ணம் பேசும்படியாக வன்ருே பெருமாள் மிக விசித்திரமான போர்த்தொழில் நிகழ்த்திற்று.

திருவாய்மொழியில் (8—6—3) *ஒருவரிருவரோர் மூவரென நின்று, உருவு கரந்து உள்ளுந்தோறும் தித்திப்பான்* என்ற பாசுரத்திற்குப் பூருவாசாரியர்கள்

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

பொருள் நிர்வஹித்திருக்கிறவிதம் இதர பண்டிதர்களின் புத்திக்குச் சிறிதும் எட்டமாட்டாதது. ஒருவரிருவரோர் மூவரென நின்றதும் உருவுகரந்ததும் எப்போதென்று தெரிந்துகொள்ளமுடியாதபடி ஆழ்வாருடைய பாசுரம் தோன்றியுள்ளது. இதற்குக் கீழ்ப்பாட்டு *செருக்கடுத்தன்று திகைத்த வரக்கரை உருக்கெடவாளிபொழிந்த வொருவனே* என்று முடிந்திருக்கிறது. மேற்பாட்டின் முன்னடிகட்டுக் கீழ்ப்பாட்டின் பின்னடிகளோடு அந்வயமென்று கண்டு உரை செய்தருளியுள்ளார்கள். இங்குப் பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்கியான ஸ்ரீஸூக்திகள் இவை காண்மின்;—''ஒருவரிருவரோர் மூவரென நின்று உருவுகரந்து—உருக்கெடவாளி பொழிந்தவொருவன் என்று கீழோடே அந்விதமாகக்கடவது. மூலபலம் சாம்படி அருளுகிறவன்று முந்துற ஒருவனாய்த்தோற்றி, சாரிகையில் வேகம் மிகமிக இருவரும் மூவருமாய்த்தோற்றி, வேகம் மிக்கவாறே இந்த்ரிய ஸம்யோகத்துக்கு இடமில்லாதபடியாகையாலே ரூபக்ரஹணம் அரிதாகி உருக்கெட வாளிபொழிந்த வொருவனென்று அந்வயம். வ்யாபரித்த சடக்காலே ரூபம் கண்ணுக்குப் 'பிடிப்படாதொழிகை'' என்று. இதனால் இராமனது வீரம் வாசாமகோசரமென்றதாயிற்று. ....

14. சக்திமதாம் ச்ரேஷ்ட: என்ற திருநாமத்தின் விவரணம்

அபரிமித சக்தியுக்தனென்கை. இராமன் மஹாசக்திமானாயிருக்கும்போது இராவணனை ஒரு நொடிப்பொழுதில் கொன்றிருக்கலாமே அங்ஙனங் கொல்லாது வெகுப்ரயாஸங்கள் பட்டதாகத் தெரிகிறதே. அஃது என்? என்று சிலர் கேட்கக்கூடும். கேண்மிண்; ''பொல்லாவரக்கனைக் கிள்ளிக்களைந்தானை'' என்று ஆண்டாளும் ''சதுரமாமதிள் சூழிலங்கைக் கிறைவன் தலைபத் துதிரவோட்டி ஓர்வெங்கணையுய்த்தவன்'' என்று திருப்பாணாழ்வாருமருளிச்செய்தபடியே ராவண ஸம்ஹாரத்தைப் பெருமாள் அவலீலையாகவேதான் செய்தார். அதில் ஐயமொன்றுமில்லை. 'எப்படியாவது ராவணன் உடன்பட்டு வழிபட்டு உஜ்ஜீவிக்கவும் ஜீவிக்கவும் ப்ராப்தமாமோ? " என்கிற ஆசை பெருமாளுக்கு இருந்தமையினாலேயே அவனை ஸம்ஹரிப்பதில் காலதாமதம் செய்யப்பட்டதென்கிற தத்துவம் உணரத்தக்கது. இராவணனைக்காட்டிலும் பன்மடங்கு வலிமைமிக்கவனென்று ப்ரஸித்தி பெற்றிருந்த வாலியை அநாயாஸமாக முடித்தவர் பெருமாள். [ஸுந்தரகாண்டம் ஸர். 51 ச்லோ. 10] திருவடி இராவணனுக்கு ஹிதோபதேசம் செய்கையில் *த்வயா விஜ்ஞாதபூர்வச் ச வாலீ வாநரபுங்கவ: ராமேண நிஹதஸ் ஸங்க்யே சரேணைகேந வாநர: * என்று. அப்பா ராவணா! வாலியென்கிற வாநரேச்வரரை ஏற்கெனவே நீ அறிவாயன்றோ; அவர் இராமனால் ஒரே அம்பினால் முடிக்கப்பட்டார்காண்' என்கிறார். அன்றியும் இராவணனைப் பலவாறு பங்கப்படுத்தியவன் கார்த்தவீரியார்ஜுனன்; அவனைப் பரசுராமன் தனது கோடாலிப்படையினால் ஆயிரங்கைகளையும் வெட்டிக் கொன்றவன். அப்பரசுராமன் இராமபிரானிடம் பட்டபாடு தெரிந்ததே. இத்தகைய ஒப்புயர்வற்ற ஆற்றல்பெற்ற இராகவன் இராவணனைக் சங்கரிக்கச் சிரமப்படவேணுமோ? சிரமப்பட்டதாகக் கதையிலே கண்டால் ஸத்யஸங்கல்பனும் மஹாவீரனுமான இராமன் எதற்காக இப்படிச் சிரமப்பட்டாரென்று ஆராயவேண்டுமன்றோ; சூர்ப்பணகை மூக்கறுப்புண்டு ஜனஸ்தானத்திலிருந்த

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

தன் தமையனாகிய கரனிடஞ்சென்று செய்தியறிவித்துப் புரண்டழுது அவனுக்குக் கோபத்தையுண்டாக்க, அவன் பதினாலாயிரம் ஸேனாதிபதிகளையும் ஸேனைகளையும் இராமனோடு போர்புரியவனுப்ப, இராகவன் அவர்களத்தனை பேரையும் தாம் ஒருவராகவே கொன்று வென்றிட, பிறகு கரன்தானே நேரில் வந்து எதிர்க்க இராமன் "அஸஹாயசூர!" என்று ரகுவீரகத்யத்தில் விளிக்கும்படியாக லக்ஷ்மணனையும் துணைகொள்ளாமல் ஏகாகியாய் அவனது தலையை யறுத்திட்டதும் ப்ரஸித்தம். 'சதுர்தச ஸஹஸ்ராணி ரக்ஷஸாம் பீமகர்மணாம், ஏகச்ச ராமோ தர்மாத்மா கதம் யுத்தம் பவிஷ்யதி!'' என்று வயிறு பிடித்த மஹரிஷிகளும் வியக்கும்படி அவலீலையாகவன்றோ நீறு செய்தது. அந்தகைய பேராற்றல்பெற்ற பெருவீரனுக்கு இராவணன் ஒரு பதார்த்தமோ? ஒரேயடியில் அவனைத் தொலைக்கமாட்டாமையில்லை; எவ்வகையினாலாவது அவன் அபிமுகனாக வருகிறானோவென்று பார்த்திருந்தாரத்தனை. இனி அடுத்த திருநாமத்திற்குச் செல்வோம்.

15. தர்ம: என்ற திருநாமத்தின் விவரணம்

ஸ்ரீராமபிரானை ஸாக்ஷாத் தர்மமாகச் சொல்லியிருப்பது பலவிடங்களில். இராவணன் இலங்கையிலிருந்து பஞ்சவடிக்கு ஓடிவந்து ஸீதாபஹாரத்திற்கு மாரீசனைத் துணைவேண்டினபோது அவன் ராவணனுக்குப் பலவாறு ஹிதோபதேசங்கள் செய்கிறான். அதனிடையில் (ஆரண். 37-13.) *ராமோ விக்ரஹவாந் தர்ம:* எனறான். 'கைகால் முளைத்து நடையாடும் தருமம் இராமன்' என்று ஆஸுர ப்ரக்ருதியான மாரீசன் சொல்லுகிறான். ராவணவதானந்தரம் இலங்கையிலே வந்து துதிக்கின்ற தேவவர்க்கத்தில் பிரமன் *பவாந் நாராயணோ தேவ:* என்றபின் *லோகாநாம் த்வம் பரோ தர்ம:* என்றான், கீதையில் "தர்மஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகேயுகே'' என்று தர்மஸ்தாபனத்திற்காகத் தான் அவதரிப்பதாகச் சொன்ன பரமபுருஷன் *ஸர்வதர்மாந் பரித்யஜ்ய* என்று ஸகல தருமங்களையும் விடும்படி சொன்னது கூடாது; விட்டுவிடு என்றதோடு நிற்காமல் "மாமேகம் சரணம் வ்ரஜ'' என்று தன்னைப் பற்றச் சொல்லுகையாலே ஸாக்ஷாத் தர்மம் தானேயென்கிற தத்துவம் வெளியிடப்பட்டதாகிறதன்றோ. நாம் சிரமப்பட்டு ஸாதிக்க வேண்டிய தர்மம் ஸாத்ய தர்மமெனப்படுகிறது. அங்ஙனன்றிக்கே எப்போதும் ஸித்தமாயிருக்கிற தர்மம் எம்பெருமான். ஸாத்ய தர்மம் அபாய பஹுளமென்றும், ஸித்ததர்மம் நிரபாயமென்றும் அறியத்தக்கது. தசரதசக்ரவர்த்தி ஸ்ரீராமபிரானைப் பிள்ளையாகப் பெறப்பெற்ற பாக்யசாலியாயிருந்தும் ஒரு தௌர்ப்பாக்யமுடையனாயினன். ஆஸுர ப்ரக்ருதியான மாரீசனுக்குத் தெரிந்த தத்துவம் அந்தோ! அவனுக்குத் தெரியாமலன்றோ போயிற்று. *ராமோ விக்ரஹவாந் தர்ம:* என்று அவன் சொன்னபடி வடிவெடுத்த ஸித்த தர்மமான இராமனோடு கூடி வாழ்வதை விட்டு ஆபாஸ தர்மமான ஸத்ய வசனத்தைப் பற்றி நின்று இழந்தானன்றோ அம்மன்னவன். முமுக்ஷுப்படியில் *ஸர்வதர்மாந் பரித்யஜ்ய* என்றவிடத்தில் "சக்ரவர்த்தியைப் போலே இழக்கைக்குறுப்பு'' என்றவிடத்து மணவாள மாமுனிகளின் ஸ்ரீஸூக்திரத்னங்களை அநுபவிப்பது. க்ருஷ்ணாவதாரத்தில் ததிபாண்டனுடைய கதையை அறியாதாரில்லை: தாயெடுத்த சிறு கோலுக்கு

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

உளைந்தோடி வந்த கண்ணனை மறைத்திட்டுவைத்து 'உன்மகன் இங்கில்லை' என்று பொய் சொல்லி ஸபரிகரமாக மோக்ஷம் பெற்றுப் போனான்; தசரதன் ஸத்யவாதியென்று பேர்படைத்து நரக பர்யாயமான ஸ்வர்க்கத்தையே பெற்று நின்றான். ராமனே ஸாக்ஷாத் தர்மமென்று அறியப் பெருததனாலானதன்றோவிது.

பெருமாள் பிராட்டியோடு கூடியிருந்தகாலத்தில் செய்தவுபந்யாஸங்களில் சிறந்தவுபந்யாஸமாக வொன்றைத் திருவடியிடம் சொல்லுகிறாள் பிராட்டி—(ஸுந்தர. 38-41.) * ஆந்ருசம்ஸ்யம் பரோ தர்ம: த்வத்த ஏவ மயா ச்ருத: * என்று. ஆந்ருசம்ஸ்யமாவது இரக்கம்; அதுதான் பரமதர்மமென்று பெருமாள் உபந்யஸிப்பது வழக்கமாம். 'கருணையே வடிவெடுத்தவன் காகுத்தன்' என்று ப்ரஸித்தம். தசாவதார ஸ்தோத்ரத்தில் *இச்சாமீந விஹாரகச்சபே*ந்யாதி ச்லோகத்தில் ஒவ்வோரவதாரத்தையும் ஒவ்வொரு விசேஷணமிட்டுச் சொல்லிவருகையில் இராமனைக் கருணாகாகுத்ஸ்த! என்று கூறியிருப்பது குறிக்கொள்ளத்தக்கது. வாலிவதமான பிறகு *ஸஞ்ஜாத பாஷ்ப: பரவீர ஹந்தா ராமோ முஹூர்த்தம் விமநா பபூவ* என்னும்படி நின்ற பெருமாளைக் கருணாகாகுத்ஸ்தனென்றுதானே சொல்லவேண்டும், இனி அடுத்த திருநாமத்திற்குச் செல்வோம். .... *

16. தர்மவித்துத்தம: என்ற திருநாமத்தின் விவரணம்

தர்மஜ்ஞர்களில் தலைவன் இராமபிரான் என்றவாறு. தர்மத்தை நன்கறிந்தவனென்கை. ஆண்டாள் கண்ணபிரானுக்குத் *தருமமறியாக் குறும்பனென்று பிருதுசாத்தினாள். அதற்கு நேர்மாறாக இராமபிரான் தர்மஜ்ஞர்களில் தலைவனாயிருப்பன். பிராட்டி இராவணனுக்கு ஹிதமுபதேசித்தருளுங்காலத்தில்* விதித: ஸ ஹி தர்மஜ்ஞ:* என்று பெருமாளை தர்மஜ்ஞரென்று கூறியிருப்பது ப்ரஸித்தம். அவள் திருவுள்ளம்பற்றின தருமம் இன்னதென்பதை அவள்தானே அடுத்தபடியாகக் கூறுகின்றாள் *சரணாகதவத்ஸல:* என்பதனால், சரணாகதர்களிடத்திலே அன்பு பூண்டிருப்பதுதான் பெருமாள் கடைப்பிடித்த தருமமென்றும் அதை அவர் நன்கறிந்தவரென்றும் சொல்லிற்றாயிற்று. நன்கறிந்தவரென்றால் அறிந்திருப்பது மட்டும் பொருளன்று. அறிவுக்குப் பயன் அனுட்டானமாதலால் அந்த தருமத்தை நன்கு அனுட்டிப்பவர் என்கிறவரையில் பொருளாகத் தேறும். ஸ்ரீராமாயணத்தில் சரணாகதி செய்தவர்கள் யார் யார்? அவரவர்களிடத்திலே பெருமாள் காட்டின வாத்ஸல்யம் எத்தகையது? என்று விமர்சிக்கவேண்டும். இதற்குமுன் சரணாகதியாவது என்? என்கிற விமர்சம் மிக முக்கியமானது. ஸாரமாகத் தெரிவிப்போமிங்கு. சரணாகதியென்றாலும் ப்ரபத்தியென்றாலும் ஒன்றே. நூற்கொள்கையை ஆய்ந்து ஆழ்ந்துபார்க்குமளவில் "பகவத் ப்ரவ்ருத்திவிரோதி ஸ்வப்ரவ்ருத்திநிவ்ருத்திதான் ப்ரபத்தியாகத் தேறுகிறது" என்கிற பூர்வாசார்ய ஸித்தாந்தமே தஞ்சமாகும். கஜேந்த்ராழ்வான் ப்ரபந்நன், த்ரௌபதி ப்ரபந்நை என்கிறோம். இவர்கள் பக்கலிலே மேலே சொன்ன லக்ஷணந்தான் ஸமந்விதமாகும். "கஜ ஆகர்ஷதே தீரே க்ராஹ ஆகர்ஷதே ஜலே" என்னும்படியாக கஜேந்திராழ்வான் தன்னைத்தான் காப்பாற்றிக் கொள்வதாக ஸ்வப்ரவ்ருத்திபரனாயிருக்குமளவும் அவன் மீது பகவானுடைய கருணை ப்ரஸரிக்கவில்லை. அந்த ப்ரவ்ருத்தி ஓய்ந்தவாறே அரை குலையத் தலைகுலைய ஓடிவரும்படியான பதற்றம் எம்பெரு

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

மானுக்கு உண்டாயிற்று. த்ரௌபதியினிடத்திலும் இத்தன்மையே பார்க்கலாம். "இரு கையும் விட்டேனோ த்ரௌபதியைப் போல'' என்னும்படியான நிலைமை அவளுக்கு உண்டான பின்புதான் அவள் ரக்ஷை பெற்றாள். தன் மானத்தைத் தானே காத்துக் கொள்வதாக முயன்று தன் சேலையைத் தான் இறுகப்பிடித்துக் கொண்டிருந்த நிலைமையுண்டே அதுதான் பகவத் ப்ரவ்ருத்தி விரோதியான ஸ்வப்ரவ்ருத்தியாயிருந்தது. அது கழிந்தவுடனே யன்றோ புடவை சுரக்கும்படியான பகவத் க்ருபை தோன்றிற்று. இந்த மருமத்தை ஸ்ரீ ராமாயணத்திலே காட்டுகிறேன் காண்மின்; காகம் சரணாகதி செய்ததாகச் சொல்லப்படுகிறது. அந்த சரணாகதியின் தன்மையை விமர்சித்துப் பார்த்தால், மேலே விவரித்த ரீதிதான் தேறும். ✳ஸ தம் நிபதிதம் பூமௌ✳ என்றபடி எங்கும் தரிப்பற்று வந்து நிலத்திலே விழுந்தமையுண்டே, அதுவேயன்றோ அவனுடைய சரணாகதியாக ஆசாரியர்களால் நிஷ்கர்ஷிக்கப்பட்டது. அவனுக்கும் ரக்ஷணம் நேர்ந்தது. காகத்தினுடையதான இந்நிலை ராவணனுக்குமுண்டு; பிரபலமான யுத்தம் நடைபெறுகிற காலத்திலே ✳யோ வஜ்ரபாதாசநி ...சசால சாபஞ்ச முமோச வீர:✳ என்னும்படியான நிலைமை ராவணனுக்கு உண்டாயிற்று. அப்போது பெருமாள் "கச்சாநுஜாநாமி—புறப்பட்டுப்போ, விடைதருகிறேன்" என்று சொல்லி விட்டருளினதுண்டே, அது தத்கால ரக்ஷணத்தில் சேர்ந்ததேயாகும். ஆத்யந்திகரக்ஷணமே பண்ணவேணுமென்கிற திருவுள்ளமும் பெருமாளுக்கு இருந்ததுண்டு; அவன் விதி வசத்தாலே மீண்டும் யுத்தத்திலே மூண்டு பகவத் ப்ரவ்ருத்தி விரோதி ஸ்வப்ரவ்ருத்தி நிஷ்டனாகித் தொலைந்து போனான். அவனுக்கும் ரக்ஷணமே செய்தருளினார் பெருமாள் என்பது ஸ்ரீ ராமாயணத்தில் அந்தரங்க பரமார்த்தம். அவனுக்கு சரம ஸம்ஸ்காரம் பண்ணமாட்டேனென்று பிடிவாதமாயிருந்த விபீஷணாழ்வானை நிர்ப்பந்தப் படுத்தி அது செய்யுமாறு கட்டளையிட்ட பெருமாள் 'அவனுடைய தேஹத்திற்கு நன்மை செய்ய நினைத்த நமது நினைவு நிறைவேறாதொழிந்தாலும் அவனுடைய ஆத்மாவுக்காவது நன்மை செய்யப் பெற்றோமே!' என்று மகிழ்ந்தபடியை நினைப்பது. ✳மரணாந்தாநி வைராணி நிர்வ்ருத்தம் ந: ப்ரயோஜநம், க்ரியதாமஸ்ய ஸம்ஸ்கார: யதா ஹ்யேஷ ததா மம✳ என்கிற பெருமாளுடைய சுலோகத்திற்கு நம்பிள்ளையின் ரஸகனமான வியாக்கியானத்தை நமது அபூர்வ ராமாயணத்திலே நாம் விசதீகரித்திருப்பது காண்க. ... *

ஸஹஸ்ரநாம ராமாயணம் முற்றிற்று.

———

ஸ்ரீகாஞ்சி பிரதிவாதி பயங்கரம்

அண்ணங்கராசார்யருடைய

உபந்யாஸக ஸௌபாக்ய மாலையில்

ஸஹஸ்ரநாம ராமாயணம்

முற்றிற்று.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸ்ரீ உ. வே. P. B. அண்ணங்கராசாரியார் சுவாமிகளின் நூல்களுக்குச் சுருக்கமான ஜாபிதா.

திவ்யப் பிரபந்த திவ்யார்த்த தீபிகையென்னும் விரிவுரையானது நாலாயிரத்திற்கும் ஸ்ரீ ஸ்வாமிகள் இயற்றியது உலகம் பரவியுள்ளது (பதவுரை, கருத்துரை, விசேஷவுரை.)

	ரூ. பை.
முதலாயிரம்	
திருப்பல்லாண்டும் பெரியாழ்வார் திருமொழியும் திருப்பாவை தீபிகையும்	8 00
திருப்பாவை ஆழ்பொருள் விளக்கு	2 00
சங்கத் தமிழ் மாலை முப்பதும் திருப்பாவை ஜீயரும்	1 50
திருப்பல்லாண்டு முதல் நாச்சியார் திருமொழிவரை எளியவுரை	3 50
நாச்சியார் திருமொழி தீபிகை	2 00
பெருமாள் திருமொழி தீபிகை	2 00
திருச்சந்த விருத்தம் தீபிகை	3 00
திருமாலை, திருப்பள்ளியெழுச்சி அமலனுதிபிரான், கண்ணிநுண் சிறுத்தாம்பு தீபிகை	4 00
இரண்டாவதாயிரம்	
பெரிய திருமொழியாயிரம் திருக்குறுந் தாண்டகம், திருநெடுந்தாண்டக முட்பட	30 00
மூன்றுவதாயிரம்	
(இயற்பா) முதல் திருவந்தாதி முதலாக இராமாநுச நூற்றந்தாதி வரை 4 வால்யம் திவ்யார்த்ததீபிகை	18 00
நான்காவதாயிரம்	
திருவாய்மொழியாயிரம் தீபிகை	30 00
நித்யாநுஸந்தானவுரை	6 00
திவ்யப்ரபந்தக் கண்ணாடி	1 00
ஆழ்வார்களுகந்த இராமன், ஆழ்வார் களுகந்த கண்ணன்	1 00
உபதேச ரத்தினமாலை, திருவாய் மொழி நூற்றந்தாதி ஆர்த்திப் பிரபந்தம் இவற்றின் உரை	3 00
ஞானஸாரம், பிரமேயஸாரம், ஸப்த காதை இவற்றின் உரை	1-00

ஸகலபூர்வாசார்ய ஸ்தோத்ரங்களுக்கு உரைகள்	
முகுந்த மாலை, ஸ்தோத்ரரத்னம் சதுச்சுலோகி	2 50
கத்யத்ரயம்	2 00
ஸ்ரீவைகுண்டஸ்தவம்	2 50
ஸுந்தரபாஹுஸ்தவம்	2 50
அதிமாநுஷஸ்தவம்	2 00
வரதாஜஸ்தவம், ஸ்ரீஸ்தவம்	3 50
ஸ்ரீரங்கராஜஸ்தவம் பூர்வசதகம்	2 50
ஷை உத்தரசதகம்	2 50
அஷ்டச்லோகி	0 75
ஸ்ரீ குணரத்நகோசம்	2 00
யதிராஜவிம்சதி, நக்ஷத்ர மாலிகை முதலான 16 ஸ்தோத்ரங்கள்	3 50
ஸுதர்சந சதக வியாக்கியானம்	5 00
ஆழ்வாராசார்யப் பெருமை நூல்கள்	
ஆழ்வார்களின் வைபவம்	1 00
பூர்வாசார்ய ப்ரபாவம்	2 00
வேதாந்ததேசிக வைபவம்	1 00
மணவாளமாமுனிகள் வைபவம்	1 00
ஐப்பசித் திருமூல மலர்	1 00
நவரத்ன நவநிதி	2 50
ரஹஸ்யார்த்த விளக்க நூல்கள்	
முமுக்ஷுப்படி ஸாரமென்கிற திருமந்த்ர த்வய-சரமச் லோகார்த்த விவரணம்	2 00
தத்வத்ரயஸாரம்	2 00
ஸ்ரீவசநபூஷணஸாரம்	3 00
ஆசார்யஹ்ருதயஸாரம்	6 00
வேதாந்தப் பொருள் விளக்க நூல்கள்	
விசிஷ்டாத்வைத தரிசனம்	1 00
விசிஷ்டாத்வைத ஸர்வஸ்வம்	1 00

மற்றும் பல பல வுள.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

திருமலையில் லக்ஷ்மீ நாராயணக்ரது

ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீமந்நாராயண ராமாநுஜஜீயர் ஸ்வாமிகள் மார்ச்சு மாதம் முதல் தேதியிலிருந்து நடத்துவதாக ஸங்கல்பித்திருந்த [ஆயிரத்தெட்டு குண்டம்] லக்ஷ்மீ நாராயண மஹாக்ரது சில காரண விசேஷங்களினால் ஒத்தி வைக்கப்பட்டிருக்கின்றது. அதாவது, நாளது ஜூன் மாதம் இருபத்தெட்டாந் தேதியிலிருந்து ஜூலை மாதம் பத்தாந்தேதி வரையில் நடத்தப் படுவதாக நிச்சயிக்கப்பட்டிருக்கின்றது.

கடிதங்கள்

திருப்பாவை சாற்றுமுறையும் விருதளிப்பு விழாவும்

சென்னை ராயப்பேட்டை ஸ்ரீநிவாஸப்பெருமாள் ஸன்னிதியில் 14—1—72 வெள்ளிக்கிழமை போகிப்பண்டிகை நன்னாளில் ஸ்ரீ. உ. வே. டாக்டர். V. V. ராமாநுஜம். M A., Ph D. அவர்கள் தலைமையிலும் ஸ்ரீ. உ. வே. M. C ஸ்ரீநிவாஸன் அட்வொகேட் அவர்கள் முன்னிலையிலும் திருப்பாவை (காலக்ஷேப) சாற்றுமறை நடைபெற்றது. யதீந்த்ரப்ரவண ப்ரபாவம் பிள்ளைலோகம் வித்வான் ஸ்ரீ. உ. வே. ஸ்தலசயனத்துறைவார் ஸ்வாமி நியாய சிரோமணி அவர்கள் திருப்பாவை ஸாரத்தையும் ஸ்ரீ ஆண்டாள் திருக்கல்யாணத்தையும் காலக்ஷேபம் ஸாதித்தார்கள். ஸ்ரீ ஸ்வாமி சுமார் 10 ஆண்டுகளாக இந்த ஸன்னிதியில் திருப்பாவை காலக்ஷேபமும், மற்ற இடங்களில் ஸ்ரீ ராமாயணம் முதலிய ப்ரவசனங்களும் நடத்தி இருக்கிறார்கள்.

ஸ்ரீ ஸ்வாமியின் பாண்டித்யத்தையும், தமிழ் மொழியில் பெற்றுள்ள தெளிந்த அறிவையும், நுண்ணிய கருத்துக்களைத் தெளிவாக எடுத்துச்சொல்லும் பாங்கையும் அறிந்து மகிழ்ந்த இப்பேட்டை வாழன்பர்கள் ஸ்ரீநிவாஸ நற்பணி மன்றத்தின் சார்பில் ஸ்ரீ ஸ்வாமிக்குச் 'சொல் வேந்தர்' என்ற விருதும் ஸன்மானமும் அளித்துக் கௌரவித்தார்கள்.

இப்படிக்கு,
கன்னியப்பன்,
ஸ்ரீநிவாஸப் பெருமாள் ஸன்னதி தர்மகர்த்தா,
ஸ்ரீநிவாஸ நற்பணி மன்றம்,
ராயப்பேட்டை, சென்னை.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

திருமலை திருப்பதி சிறிய ஜீயர் ஸ்வாமி பட்டாபிஷேகம்

ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீவிஷ்ணுசித்தராமாநுஜ சிறிய ஜீயர் ஸ்வாமி 30-12-71ல் திருநாடலங்கரித்தாரென்றும் இந்த ஸ்வாமியின் ஸ்தானம் விரைவில் பரிபூரிதமாகுமென்றும் குறிப்பிட்டு, இத்திருவருள் பெறுவார் யவர்கொல்! "தழை நல்லவின்பம் தலைப்பெய்தெங்குந் தழைக்கவே" என்று மதுரேண ஸமாபநம் செய் திருப்பதை ஸ்ரீ ராமாநுஜன் 279ல் வாசகர்கள் கவனித்திருக்கக் கூடும். அதன்படியே 20—1—72ல் அந்த ஸ்தானம் பரிபூரிதமாகித் தழைநல்லவின்பம் தலைப்பெய்து எங்கும் தழைத்தது.

இத்திருவருள் பெற்றவர் ஸ்ரீவில்லிபுத்தூரைச் சேர்ந்த ஸ்ரீ. உ. வே. கிடாம்பி ராமாநுஜையங்கார் ஸ்வாமியேயாவர். இவர் ஸ்வரூபரூபகுணங்கள் மலிந்தவர். செந்தமிழும் வடமொழியும் திகழ்ந்த நாவர். சென்னையிலும் தஞ்சையிலும் காலேஜில் பண்டிதராய்ப் பணிபுரிந்து விச்ராந்தி பெற்றுத் திருவரங்கம் பெரியகோயிலில் அழகிய மணவாளனுக்கு அருளிச்செயலோதும் அத்யாபகராயிருந்தவர் கிம் பஹுநா? ஜ்ஞாநாநுஷ்டான நிதியாய்த் திருவேங்கடமுடையானுக்கு "ஒழிவில் காலத்தில் ஆழ்வார் பாரித்தபடியே அடிமைசெய்துகொண்டு, நம்முடைய பாக்யபரிபாகத்தால் இப்போது ஸேவை ஸாதித்துக்கொண்டிருக்கிற பெரிய கோவில்கேள்வி அப்பன் ஸ்ரீரங்கராமாநுஜ பெரிய ஜீயர் ஸ்வாமி ஸந்நிதியில் பூர்வாச்ரமத்தில் பகவத்விஷய ரஹஸ்யாதி க்ரந்தங்களை அதிகரித்துத் தெளிந்து, ஸதாசாரத்திலும் அவர்தம்மாலேயே சிக்ஷிக்கப் பெற்றவர் என்பதொன்றே இவர் பெருமைகளுக்கு எடுத்துக் காட்டாகும்.

இவருடைய ஸந்யாஸாச்ரமத்திற்குச் செய்ய வேண்டிய ஹோம முதலிய சடங்குகளெல்லாம் முடிந்து 19—1—72 இரவு பூர்ணாஹுதியாயிற்று. 20-1-72 விடியற்காலை 5 மணிக்குத் திருப்பதி ஸ்ரீ கோவிந்தராஜன் ஸந்நதியில் எழுந்தருளி யிருக்கும் எம்பெருமானார்க்குச் சாத்திக் களைந்த த்ரிதண்ட காஷாய யஜ்ஞோபவீதங்களை எம்பெருமானார் திருமுன்பே பெரியஜீயர்ஸ்வாமி தமது திருக்கைகளால் ப்ரஸாதிக்கப் பெற்று இவர் க்ருதார்த்தராய் அவருடனும் அந்தரங்க பரிஜனங்களுடனும் ஆழ்வார் தீர்த்தத்திற்கு எழுந்தருளி ப்ராதரநுஷ்டானங்களை முடித்துக் கொண்டு திருமலையேறி டோலமண்டபம் என்ற திருமலையின் எல்லையில் எழுந்தருளி யிருக்க, திருவேங்கடமுடையான் ஸந்நிதி கைங்கர்யபரர்கள் அதிகாரிகளுடனும் மேளதாளச் சத்ரசாமராதிகளுடனும் வந்து எதிர் கொண்டழைத்துச்செல்லத் திருவீதி வலமாக எழுந்தருளி ஸ்ரீஸ்வாமி புஷ்கரிணியைச் சேர்ந்து மாத்யாஹ்நிகாநுஷ்டானங்களை நிறைவேற்றி ஸ்ரீ வராகப்பெருமானை மங்களாசாஸனம் செய்தருளி மரியாதைகளைப் பெற்றருளி அதிகாரிகளும் ஸ்ரீ வைஷ்ணவர்களும் புடை சூழ, "தன் நம்பியோடப் பின்கூடச் செல்வான்" என்கிறபடியே ஸ்ரீ பெரிய ஜீயர் ஸ்வாமி புருஷகாரமாக முன்னேயெழுந்தருள அவர் பின்னே சென்று பெரிய ஸந்நிதிசேர்ந்து அலர்மேல் மங்கையுறைமார்பனை திருமலையப்பனெதிரில் தண்டம் ஸமர்ப்பித்துக் குன்றமேந்தி-அகலகில்லேன்-ஒழிவில்காலம்-பல்லாண்டு-கத்யத்தில் முதல் சூர்ணிகைகளை மாநஸிகமாக அநுஸந்தித்துக்கொண்டு இவர் (சிறிய ஜீயர் ஸ்வாமி) நிற்க, பின்னிட்ட சடையானும் பிரமனுமிந்திரனுந் துன்னிட்டுப் புகலரிய வைகுந்தநீள்வாசல் தொடக்க மானவற்றின் எல்லாத் திறவுகோல்களையும் எம்பெருமானார் திருவுருவம் பொறிக்கப்

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

பெற்று கநிஷ்டதர்மகர்த்ருத்வத்திற்குச் சிஹ்நமாயிருக்கிற மோதிரத்தையும் அர்ச்சகர்கள் பெருமாள் திருவடிகளில் ஸமர்ப்பித்து எடுத்துவந்து இவர்கையில் திறவுகோல்களைத் தந்து மோதிரத்தை அணிவிக்கவும், பரிவட்டங்கட்டி ஸ்ரீ சடகோபன் ஸாதித்து சந்தனம் ஸ்ரீபாதரேணு ஸ்ரீபாதவஸ்த்ரம் வரதஹஸ்தம் முதலிய ப்ரஸாதங்களை ப்ரஸாதிக்கவும், ஸ்ரீமத் பரமஹம்ஸ பெரிய ஜீயர் ஸ்வாமி தம் திருக்கைகளால் திருவேங்கடமுடையான் உடுத்து முசிந்த உள்சாத்தென்னும் திருப்பரிவட்டத்தைப் போர்த்தியருளவும், பராக் ஸ்வாமீ பராக் அருளப்பாடு திருவேங்கடமுடையான் நித்யைச்வர்யத்துக்கும் கோடித் திருவாபரணங்களுக்கும் முடிப்பு முத்ரைகளுக்கும் காரணகர்த்தாவான இளைய கோவில்கேள்வி அப்பன் ஸ்ரீசடகோபராமாநுஜ ஜீயர் ஸ்வாமி என்று அருளப்பாடு ஸாதிக்கவும் அவற்றைப் பெற்று ப்ரதக்ஷிணமாக எழுந்தருளி எம்பெருமானுர்—வேங்கடத்தரி ஸந்நிதிகளிலும் மங்களாசாஸன மரியாதைகள் நடந்த பிறகு புறப்பட்டுச் சென்று தம்முடைய மடத்தில் ஸிம்ஹாஸநத்தில் சற்று வீற்றிருந்து மறுபடியும் திருவீதிவலமாகப் பெரிய ஜீயர் ஸ்வாமி மடம் சென்று சேர்ந்தருளினுர்.

அங்கு ஜீயர் ஸ்வாமிகளிருவரும் அர்ச்சகர்களுடனும் ஆசார்ய புருஷர்களுடனும் அதிகாரிகளுடனும் மற்ற கைங்கர்யபரர்களுடனும் எழுந்தருளியிருக்க, பெருமாள் அமுதுசெய்து அனுப்பியருளிய ப்ரஸாதங்களும் தாம்பூலபலாதிகளும் ஸ்தான பஹுமான க்ரமத்தில் விநியோகிக்கப்பட்டு, மடத்தில் பெருமாள் அமுதுசெய்து சாத்துமுறையாகித் ததீயாராதனமும் முடிவுபெற்றபிறகு கீழுக்கு இறங்கி, அடிவாரத்தில் ஸ்ரீகோவிந்தராஜன் ஸந்நிதி அதிகாரிகளும் ஸ்ரீவைஷ்ணவர்களும் சத்ரசாமரவாத்யங்களுடன் எதிர்கொண்டழைக்கப்பெற்றுப் பல்லக்கில் ஏறியருளிச் சென்று சக்ரவர்த்தி திருமகனை மங்களாசாஸனம் செய்து மரியாதைகளைப் பெற்று ஸ்ரீகோவிந்தராஜன் ஸந்நிதிக்கெழுந்தருளிக் கருமாகடலுள் கிடந்தானுன மூலமூர்த்தியையும் சித்திரகூடத்துள்ளான் தேவாதிதேவனென்னும் உத்ஸவமூர்த்தியையும் மங்களாசாஸனம் செய்து மரியாதைகளைப்பெற்று ஆண்டாள் திருமங்கைமன்னன் திருமலை நம்பிகள் எம்பெருமானுர் கூரத்தாழ்வான் மதுரகவிகள் அநந்தாழ்வான் ஸ்ரீபுண்டரீகவல்லித் தாயார் முதலாழ்வார்கள் மணவாளமாமுநிகள் வேதாந்த தேசிகர் ஆகியவர்களை மங்களாசாஸனம் செய்து பல்லக்கிலேறித் திருவீதிப்ரக்ஷிணமாக எழுந்தருளித் தென்னண்டை மாடவீதியில் பெரியாழ்வாரையும் வடவண்டை மாடவீதியில் நம்மாழ்வாரையும் திருப்பாணுழ்வாரையும் மங்களாசாஸனம் செய்து 20-1-72 மாலை 6 மணிக்குத் தம்முடைய திருப்பதிமடத்தைச் சேர்ந்து ஸிம்ஹாஸனத்தில் அமர்ந்தருளினுர்—சிறிய ஜீயர் ஸ்வாமி. பிறகு திருமலையிற்போல் அர்ச்சகர்களும் ஸ்தலாசார்யபுருஷர்களும் இதர கைங்கர்யபரர்களும் மடத்திற்கெழுந்தருள, கோஷ்டிக்குச் சந்தன தாம்பூல பலாதிகளும் தக்ஷிணையும் விநியோகிக்கப்பட்டன. இங்ஙனமாகப் பட்டாபிஷேக மகோத்ஸவம் மிகவும் சிறப்பாக நிறைவேறியது. இரு ஜீயர் ஸ்வாமிகளும் பல்லாண்டு பல்லாண்டாக எழுந்தருளியிருந்து தாம் தொண்டுசெய்து இன்புற்று உலகின்புறச்செய்யவேண்டுமென்று அலர்மேல் மங்கையுறைமார்பனுன திருவேங்கடமுடையான் பூவார்கழல்களில் ப்ரார்த்தித்து நிற்கிரேம்.

திருப்பதி,
21-1-72.

இங்ஙனம்,
திருமலை திருப்பதி வாஸிகள்.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸ்ரீ

சென்னை 24-1-72

[ஸ்ரீமான் சென்னை N. வேணுகோபால நாய்க்கர், B.A B.L. தெரிவிப்பது]

பாரதபண்டித மஹா மஹோபாத்யாயர், ப்ரதிவாதிபயங்கரம்

ஸ்ரீ அண்ணங்கராசாரியர்

விரோதிக்கிருது மார்கழித் திருப்பாவைக் காலட்சேபம்

—*—

ஸ்ரீ C. R பட்டாபிராமன், *பார்-அட்-லா*

(முன்னாள் இந்திய அரசு சட்ட அமைச்சர்)

பாராட்டு

நமது காஞ்சி. ப்ரதிவாதிபயங்கரம் ஸ்ரீ அண்ணங்கராசாரிய சுவாமிகளும், நானும் காஞ்சியைச் சேர்ந்தவர்கள். நமது சுவாமிகள் தமது வாழ்நாளில் 1000 புத்தகங்களுக்கு வெளியிட்டுள்ளார்கள். இது பெரிய சாதனை! என் வாழ்நாளில் எத்தனையோ ஆங்கில நூல்களைக் கற்றுள்ளேன். விஷயங்களை அறிந்துள்ளேன்! இவை எல்லாம் வாழ்க்கைக்கு உபயோகமில்லாமல்போனது! மறந்தும் போனவை பல! சாரமற்றவைகளும்கூட! நமது பெரியவர்கள் நமக்குச் சேகரித்து வைத்துள்ள ஞானநூல்களின் விசேஷத்தை அளவிடமுடியாது! இந்தச் செல்வத்தில் இந்திய நாடு இணையில்லாதது! தற்போது வெளிதேசத்தினர்கள் கூட, நம் மதநூல்களைக் கற்றுப்போற்றுகின்றனர்கள்! நமது சுவாமிகள் அரிய விஷயங்களை நூல்வடிவில் வெளியிட்டுள்ளது பெரிய சேவையாகும்!

காஞ்சி அண்ணங்கராசாரிய சுவாமிகளுடைய காலட்சேபம் கம்பீரமமாகவும் விளக்கமாகவும், பயனுடையதாகவும் இருக்கின்றது! இன்று திருப்பாவையில் ஒரு பாடலில் (ஒருத்தி மகனாய்ப்பிறந்து) எத்தனையோ உயரிய கருத்துக்களைச் சேகரித்துத் தந்தார்கள்! ஆழ்ந்த ஞானத்துடன் காலட்சேபப் பாண்டித்யமும் சேர்ந்துள்ளது!

தற்காலத்தில், இம்மாதிரியான உபன்யாசங்கள் மிகவும் அவசியம். மனத்தில் ஆழ்ந்து பதிகின்றன! ஸ்ரீமத் சுவாமிகள் பல்லாண்டு இனிது வாழ்ந்து பக்திநெறியைப் பரப்பும் நூல்களை மேன்மேலும் வெளியிட்டும், உபன்யாசங்களைப் புரிந்தும், உதவவேண்டுகின்றேன்! நமது ஸ்ரீ அண்ணங்கராசாரிய சுவாமிகள் வாழ்க!

தலைநகரில் ஆண்டாள் விக்ரஹப் ப்ரதிஷ்டை

ஸ்ரீ பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீ ஸ்ரீமந்நாராயண ராமாநுஜ ஜீயர் ஸ்வாமிகளால் டில்லியில் ஸ்ரீராமமந்திர் என்ற சக்கிரவர்த்தி திருமகன் திருக்கோயிலும் எம்பெருமானார் திவ்யமங்களப்பிரதிஷ்டையும் 1970-ம் வருஷம் நவம்பர் மாதம் மணவாள மாமுனிகள் ஆறுவது நூற்றாண்டு பூர்த்தி விழா ஞாபகார்த்தமாக ஸ்தாபிக்கப்பட்டது ப்ரஸித்தம். இந்த சன்னிதியில் கடந்த நவம்பர் 28-ந் தேதி "பெரும்பூதூர்மாமுனிக்

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

குப் பின்னுனுள் வாழியே" என்று ஸ்ரீவைஷ்ணவ உலகம் தினம் பல்லாண்டு பாடும் ஆண்டாளின் உத்ஸவ திவ்ய மங்கள விக்ரஹப் பிரதிஷ்டை விமரிசையாகநடந்தேறியது.

மூன்றரை ஆயிரம் ரூபாய் செலவில் செய்விக்கப்பட்ட இந்த அழகிய பஞ்சலோஹ விக்ரஹம் 27 அங்குலம் உயரமும் 26 கிலோக்ராம் கனமும் உள்ளது. அழகுத் தெய்வமாக விளங்கும் இந்த மங்கள விக்ரஹம் மைசூரில் பிரஸித்தர்களான கற்சிற்பி சின்ன ஆசாரி, N. S. வெங்கட ஆசாரி என்பவர்களால் மிக ஆச்சரியமாக செய்யப்பட்டுள்ளது ஆண்டாள் விக்கிரஹ கைங்கரியம் 'டில்லி சர்வகலாசாலை பேராசிரியை டாக்டர். குமாரி விஞேதா அவர்களுடையதாகும்.

டில்லி "மாமுனிகளின் ஆருவது நூற்ருண்டு பூர்த்தி விழா கமிட்டி"யார் டாக்டர் விஞேதாவின் கன்னட பாஷையில் மொழி பெயர்க்கப்பட்ட உபதேச ரத்னமாலையை வெளியிட்டு கௌரவித்தது உலகமறிந்ததே டாக்டர் விஞேதா பேராசிரியர் ஸ்ரீ K. V. ராகவாச்சாரியாரின் திருக்குமரியாவர். ஸ்ரீ ராகவாச்சாரியரும் டில்லி யூனிவர்சிடியில் கன்னடபாஷை பேராசிரியராக யிருந்து ஓய்வெடுத்துக் கொண்டார் இவர் மைசூர் ப்ராந்தத்தில் பிரஸித்த ஸ்ரீவைஷ்ணவ ஆகமிகர்கள் வம்சத்தைச் சேர்ந்தவர். திருநாராயணபுரம் சன்னிதியில் கைங்கர்யம் செய்யும் பாக்யம்பெற்ற குடும்பத்தில் அவதரித்த இந்த மஹநீயர் பல பாஷைகளில் பாண்டித்யம் பெற்றவர். மேனுட்டு இலக்கியங்கள் பலவற்றைக் கன்னடபாஷையில் மொழிபெயர்த்து பிரசுரித் திருக்கும் பெருமைவாய்ந்தவர். ஸ்ரீ ராகவாச்சாரும் அவர் பெண் டாக்டர் விஞேதாவும் ஸ்ரீ வைஷ்ணவ உலகத்திற்கு தலை நகரில் ஆற்றிவரும் தொண்டுகள் மெச்சத்தக்கன. இந்த மஹநீயர்கள் பல்லாண்டு வாழ்க. நித்ய ஸ்ரீர் நித்யமங்களம்.

—A. ராமாநுஜாசாரியர் B. A.

ஸ்ரீ வைஷ்ணவ மஹநீயர்

ஸ்ரீ உ. வே. திருமலை அனந்தாண்பிள்ளை

திருவேங்கடாசாரியார் ஸ்வாமியின் ஷஷ்டியப்த பூர்த்தி

காஞ்சிக்கு 12 மைல் தூரத்திலுள்ள மலையடி குன்னவாக்கம் அக்ரஹாரத்தைச் சேர்ந்தவர் ஸ்ரீ உ வே. T. A. திருவேங்கடாசாரியர் ஸ்வாமி. இவர் சமஸ்கிருதத்தில் சிரோமணி பட்டம் பெற்றவர். திருப்பதியில் புரிசை கிருஷ்ணமாச்சார் ஸ்வாமியிடம் ஸ்ரீபாஷ்ய காலக்ஷேபம் அதிகரித்து, ராஜஸ்தான ப்ராந்தத்தில் கோட்புத்லி என்ற இடத்தில் ஸ்வாமியின் பூர்வர்களால் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீரங்கஜீ மந்திர் என்ற திருக்கோயிலில் 35 வருஷம் கைங்கரியம் செய்துவந்தார். சமீபத்தில் அவர் டில்லிக் கெழுந்தருளி சம்பிரதாய காரியங்களில் ஈடுபட்டிருக்கிருர். டில்லி ஸ்ரீராமமந்திர் சன்னிதியில் இவர் செய்துவரும் கைங்கரியங்கள் மெச்சத்தக்கன. இந்த ஸ்வாமியின் ஷஷ்டியப்தபூர்த்தி கடந்த டிஸம்பர் 10ந் தேதி ஸ்ரீபெரும்பூதூரில் எம்பெருமானுர் சன்னிதிச்சாயையில் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. ஸ்ரீரங்கம், காஞ்சி முதலிய திவ்ய தேசங்களிலிருந்து மரியாதைகள் அனுப்பப்பட்டு ஸ்வாமி கௌரவிக்கப்பட்டார். இந்த ஸ்ரீவைஷ்ணவ மஹநீயர் பல்லாண்டு வாழ்க!

—A. ராமாநுஜாசாரியர், B. A.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

P. B. அண்ணங்கராசார்ய ஸ்வாமிகளின் நூல் துறைகள்.

1. நாலாயிர திவ்யப்பிரபந்நவுரைகள்
2. பூர்வாசார்ய தமிழ்ப்பிரபந்தவுரைகள்
3. ஸகல பூர்வாசார்யஸ்தோத்ர வுரைகள்
4. ஆழ்வாராசார்யப் பிரபாவ நூல்கள்
5. இதிஹாஸ புராண சரித்திர நூல்கள்
6. ரஹஸ்யார்த்த விளக்க நூல்கள்
7. வேதாந்தப் பொருள் விளக்கநூல்கள்
8. வேதலக்ஷணவிசார நூல்கள்
9. ஸத்ஸம்ப்ரதாயார்த்த விளக்க நூல்கள்
10. லோகாபிராம உபந்யாஸ நூல்கள்
11. பரபக்ஷப்ரதிக்ஷேப நூல்கள்
12. உபந்யாஸக ஸௌபாக்ய வெளியீடுகள்
13. வடமொழி நூல் திரள்கள்
14. ஹிந்தீ பாஷையில்
15. தெலுங்கு பாஷையில்
16. பூர்வாசார்ய க்ரந்த வெளியீடுகள்

விரிவான கியாடலாகுகள் தருவித்து விவரங்காண்க.

If un-delivered please return to:

P. B. ANNANGARACHARYA,

KANCHEEPURAM-3.

391 Sri Vangeepuram
Raghavacharyaswami,
Melkote. (Mysore State)

Edited and Published by P. B. Annangaracharya Swami
for Madras Satgrantha Prakasana Sabha.
Printed by T. A. P. Srinivasavaradan at Sri Venkateswara Press
Sannidhi Street, Kanchipuram-3.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.